## சார்க் மாநாடு இலங்கையில் நடைபெறும்

### -அமைச்சர் ஹேரத்

[கொழும்பு]

'சார்க்' உச்சிமாநாடு இலங்கையில் நடக்குமா? அல்லது மாலைதீவில் நடக்குமா? இலங்கையில்தான் நடக்கும் என்கிறார் வெளிநாட்டுஅலுவல்கள் அமைச்சரும், நிதி இராஜாங்க அமைச்சருமான திரு. ஹரல்ட் ஹேரத்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர் திரு. தர்மசிறி

(8ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | சித்திரை: 13 | றம்ழான் பிறை: 29 | இதழ்: 73

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 26-04-1990

## 250 இலோ குண்டு!



இந்தியப் படையினர், விடுதலைப் புலிகளுக்கு எதிராக வன்னிக்காட்டில் பாவித்த 250 கிலோ கொண்ட குண்டு. இக்குண்டு வெடித்தால் சாதாரணமாகஒருகிணற்றின் அளவு ஆழத்தில் குழி ஏற்படுவதோடு, பல சேதங்களை ஏற்படுத்தும். ஒரு 4½ அடிச் சிறுவனின் உயரத்திலும் பார்க்க இக்குண்டு பெரியது என்பதுகுறிப்பிடத்தக்கது.

## இந்திய கடற்றொழிலாளர் விடயத்தில் புலிகள் எடுத்தமுடிவில்என்னபிழையிருக்கிறது

### பாராளுமன்றில் ரஞ்சன்

(கொழும்பு)


இந்தியக் கடற்றொழிலாளர், இலங்கை எல்லைக்குள் பிரவேசித்ததால் இலங்கை கடற்றொழிலாளரின் நன்மைக்காக விடுதலைப் புலிகள் எடுத்த முடிவில் என்ன பிழை இருக்கமுடியும் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன, நேற்றுப் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் தெரிவித்தார்.

அவரது பேச்சின் இடையில் குறுக்கிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் பல குறுக்கீடுகளைச் செய்தபோதும், தமது பதிலை அமைச்சர் உறுதியாக அளித்தார்.

அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் சமாதானமாகச் சகல பிரச்சனைகளையும் பேச்சுவார்த்தைகளினுல் தீர்த்துக்கொள்ள முனையும் போது, எதிர்க் கட்சியினர் அவசியமற்ற வினுக்களை எழுப்பி வேடிக்கை காட்ட வேண்டாம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

★ நியாயமான குறிக்கோளுக்காகப் போராடுகிறேம்

# மக்கள் துணை இருந்ததால் நாங்கள் வெற்றி பெற்றேம்



## இந்தியா டுடே சஞ்சிகைக்கு மாத்தயா பேட்டி

(புதுடில்லி)

"தமிழ் மக்களின் நியாயமான குறிக்கோளுக்காகப் போராடிறேம். மக்கள் துணை எமது பக்கமிருந்ததால் நாங்கள் வெற்றிபெற்றேம்". இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) 'இந்தியா டுடே' (ஏப்ரல் 6-20) சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

"தமிழர்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதால் முன்பு இருந்தபடியே இராணுவ அமைப்பை அப்படியேவைத்திருக்கிறேம்'' என்றும் தெரிவித்துள்ள திரு. மாத்தயா அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''அரசாங்கத்துக்கும் எங்களுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு அமைதியும், சகஜ நிலையும் திரும்புமென்று எதிர் பார்க்கிறேம். இவ்வளவு காலமாகத் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் முந்தைய அரசுகள் அநீதி இழைத்துவந்தன. எங்களைச் சமமாக நடத்திஞல்தான் தீர்வு கிடைக்குமென்று

(8ம் பக்கம் பார்க்க)

## நிலத்துக்கு அடியில் ஜே. வி. பி. அச்சகம்

[கொழும்பு]

தங்காலையில் நிலத்திற்கு அடியிலிருந்து நவீன அச்சகமொன்றைப் பாதுகாப்புப் படையினர் நேற்றுக் கண்டு

(8ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் வடபகுதி விஜயம் ஒத்திவைப்பு

[கொழும்பு]

சகல அமைச்சர்களினதும் வடபகுதிக்கான விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாகக் கொழும்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படாத போதிலும் அடுத்த சில வாரங்களுக்கு கொழும்பிலிருந்து அமைச்சர்கள் எவரும் வடபகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ள மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்கள் திரு. அதிகாரி, திரு. தேவராஜ், திரு. வின்

(8-ம் பக்கம் பார்க்க

## இந்தியப் படையினரால் கைதாகி காணுமல் போனவர்கள் பற்றி இலங்கை அரசிடம் புகார்

### வல்வை பிரஜைகள் குழு நடவடிக்கை

(வடமராட்சி)

இந்தியப் படையினராலும், அவர்கள் சார்ந்த தமிழ்க் குழுக்காலும் கைது செய்யப்பட்டுக் காணுமல் போயுள்ளவர்கள் நிலைபற்றி 'வல்வை பிரஜைகள் குழு' இலங்கை அரசிடம் முறையிட்டுள்ளது.

இவர்கள் நிலைபற்றி உடனடியாக சப்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு விபரம் தருமாறும் குழுவினர் அரசைக் கோரியுள்ளனர்.

இவ்வாறு காணுமல் போனவர்களின் பெயர்ப் பட்டியல் 23ம் திகதிதிங்கட்கிழமை ''ஈழநாடு'' தினசரியில் வெளிவந்தது வாசகர் அறிந்ததே. இவ்விடயம் பற்றி வல்வைப் பிரஜைகள் குழுவிடம் விபரம்

(8-ம் பக்கம் பார்க்க)

புங்குடுதீவில் நடைபெற்ற தேனிசை செல்லப்பா இசை நிகழ்ச்சியின்போது, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகி பேசிக்கொண்டிருக்கிறுர். தேனிசை செல்லப்பா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு.கோ. மகேந்திரராசா மாத்தயா ஆகியோர் இருக்கின்றனர். இரண்டாவது படம் சனத்திரளின் ஒரு பகுதி.



## நகைக்கடை உரிமையாளர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நகைக்கடை உரிமையாளர்கள் கூட்டம் நாளை 27-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். வின்சர் திரையரங்கில் நடைபெறும். சகல நகைக்கடை உரிமையாளர்களும் தவருது சமூகம் தருமாறு தமிழீழவிடுதலைப்புலிகள் கேட்டுள்ளார்கள்.

# தேனிசை செல்லப்பா இன்று மன்னாரில் இசைமழை

(மன்னார்)

எழுச்சிப்பாடகர் 'தேனிசை' செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி இன்று மன்னாரில் நடைபெறுகிறது.

இன்று மாலை 5-00 மணிக்கு மன்னார் விளையாட்டரங்கிலும் நாளை விடத்தல்தீவு விளையாட்டரங்கிலும் தேனிசை செல்லப்பா இசைமழை பொழிவார் இதற்கான ஏற்பாடுகளை மன்னார் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிகலைகலாச்சாரப் பிரிவு செய்துவருகின்றது.




## வரி விளம்பரம்

### காணவில்லை

கடந்த சனிக்கிழமை (21-4-90) சின்னக்கடைக்குப் போன பெண்பிள்ளை வயது 13 உயரம் 4அடி பொதுநிறம் நேர் உச்சி பிரித்து தலையிழுத்திருக்கிறார் காணமல் போன அன்று பச்சை நிறப்பாவாடை பச்சை புள்ளி ரிசேட் அணிந்திருந்தா. இப்பிள்ளையைக் கண்டவர்கள் தயது செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அறியத்தரவும். S. K. சின்னையா கிளி, இல. 110/3, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம். (சி 3790)


## சிற்றூரவைப் அமைக்கும் பணிகள் முடிவடைந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் சிற்றூரவை அமைக்கும் வேலைகள் முடிவடைந்து விட்டதாக விடுதலைப் புலிகளின் கோண்டாவில் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த சிற்றூரவை மக்க

(7-ம் பக்கம் பார்க்க)

## பெந்தெகோஸ்த சபை ஆண்டு மாநாடு

(புலோலி)

இலங்கை பெந்தெகோஸ்தே சபையின் இவ்வாண்டுக்கான வருடாந்த மாநாடு இன்று வியாழன் முதல் 29ம் ஞாயிறு வரை நடைபெறவுள்ளது.

சுண்டிக்குளியிலுள்ள இலங்கை பெந்தேகொஸ்தே சபையில் நடைபெறும் இம் மாநாட்டில் தினமும் மாலை 5 மணிக்கு சுவிசேஷ நற்செய்தியுடன் தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும் நடைபெறும்.

அத்துடன் தினமும் காலை 7 மணிக்கு வேதபாடமும், 9 மணிக்கு காலை ஆராதனையும், மாலை 3 மணிக்கு பரிசுத்தாவியின் கூட்டமும் இடம்பெறும். (61)

# மாணவர் தாமாகப் படித்து அறிவை வளர்க்க வேண்டும்

(உடுவில்)

''முன்னைய ஆசிரிய-மாணவ உலகுடன் இன்றைய மாணவ ஆசிரிய உலகை ஒப்பிடும் போது ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பணிந்து கீழ்ப்படிவுடன் விளங்கும் தன்மை மிகக்குறைவாகக் காணப்படுகின்றது தனியார் கல்விக் கூடங்கள் தோன்றிய பிற்பாடு மாணவர்கள் தாமாகவாசித்து அறிவைத்தேடும் நிலை மறைந்துவிட்டது. மாணவர் தாமாக நூல்களைப் படித்து சுயமாகத் தம் அறிவை விஸ்தரித்து வளர்க்கவேண்டும்''.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரிய பயிலுநர் திசைகோள் உறுத்தல் வகுப்பினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மருதனுமடம் கோட்டக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு ஆர். கே. குலசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி திசைகோள் உறுத்தல் வகுப்பில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அண்மையில் நியமனம் பெற்ற சுமார் தொண்ணூறு ஆசிரியர் பயிலுநர்கள் கலந்து கொண்டனர்.

திரு. குலசேகரன் தொடர்ந்து பேசியதாவது; இன்று தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களில் அநேகமானோர்கூட தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பெற்றவர்களே. மிகக் குறுகிய வட்டத்துக்குள்ளேயே ஆசிரிய-மாணவ உலகம் இன்று தன் அறிவைவைத்துக்கொண்டுள்ளது. இவ்வறிவு விஸ்தரிப்புப் பெறவேண்டும். நூலகங்களைப் பயன்படுத்தும் பாடசாலைகளும்- மாணவர்களும் யாழ்ப்பாணத்தில் அரிதாகவே காணப்படுகின்றனர்.

அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி இலங்கையில் எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள் 85வீதத்திலிருந்து 75 வீதமாக குறைந்துள்ளனர்.

எடது கல்வி முறையில் அமைந்துள்ள பலவீனம் பிள்ளைகளைத் தன்னிச்சையாக செயற்படவிடாமல் செய்வதாகும். ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட உங்களிடமிருந்து கல்வி உலகம் ஆகவும் குறைவாக எதிர்பார்ப்பது என்னவென்றால் உங்களுக்குத் தரப்பட்ட பாடத்தில் உறுதியான அறிவை நீங்கள் பெற்றுக்கொண்டு அறிவின் பரப்பளவை விஸ்தரித்து மாணவர்களுக்கு பயிற்றுவியுங்கள் என்பதாகும்.

எதிர்காலச் சிற்பிகளை வடித்தெடுக்கும் ஆயுதங்கள் உங்கள் கைகளில் தரப்பட்டுள்ளன. சிறந்த முறையில் அவற்றை நீங்கள் பயன்படுத்தி அன்னை-பிதா ஆகியோருக்கும் மேலாக ஆசிரியர்களை மாணவர் கருதி செயற்பட வைத்து சிறந்த ஒரு சமூகத்தை உருவாக்குங்கள். கல்வி அறிவு வெறும் பட்டங்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை. ஆற அமர இருந்து சிந்தித்து நீங்கள் செயற்படவேண்டும்.

சமூகத்தில் ஆசிரியரின் பங்கு பிரதானமானது. சமூகம் பாடசாலைகளையும் ஆசிரியர்களையும் மாற்றமுடியும். ஆனால் பாடசாலை ஆசிரியர்களோ சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை மாற்றமுடியாதென்பதை உணர்ந்து நீங்கள்செயற்படுங்கள்.

ஆசிரியர் சண்முகராசா கற்பித்தல் தொடர்பான பயிற்சிகளை அளித்தார். (109)

# தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைநிலையம் இயங்க நடவடிக்கை எடுங்கள்

## அமைச்சருக்கு கோரிக்கை

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வளவில் அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை உடன் செயல்படவைக்குமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் சுகாதார அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளது.

வடபகுதி புற்றுநோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு மகரகமவுக்கு சென்று அலையாமல் இலகுவாக சிகிச்சை பெற வசதியாக தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வளவில் பல லட்ச ரூபா செலவில் இப்புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டது.

இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகியும் இன்னமும் செயல்படாமல் உள்ளது. இதற்கு காலத்திற்குக்காலம் பல்வேறு சாக்குப்போக்குகள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன.

தற்போது நிலைமை சீரடைந்துள்ளதால் இப்புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை உடன் செயல்படவைக்குமாறு சுகாதார அமைச்சரிடம் வற்புறுத்தப்பட்டுள்ளது.

வடபகுதியில் புற்றுநோயாளர்கள் தொகை அதிகரித்து வருவதால் அவர்கள் தகுந்த சிகிச்சை முறைகளைப் பெற முடியாமல் பெரிதும் கஷ்டமுறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேரடியாக அமைச்சரைச் சந்தித்து இதுகுறித்து வலியுறுத்தவும் மேற்படி சங்கம் ஏற்பாடு செய்துவருவதாக சங்கத்தலைவர் திரு. இ. குலசேகரன் தெரிவித்தார். (86)

## மிளகாய்ச்செய்கை பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை. சங்கானை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட மிளகாய்ச் செய்கை குருமன் நோயினால் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

தாம் மிகவும் கஷ்டப்பட்டு பயிரிட்ட மிளகாய்க் கன்றுகளுக்கு குருமன்நோயை தடுப்பதற்கு கிருமிநாசினி தெளித்தும் ஒருவித பிரயோசனமும் இல்லை என்று இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

விவசாய திணைக்கள அதிகாரிகள் இதுபற்றி தங்களுக்கு ஆலோசனை வழங்கவேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர். (72)

## ரூ. 19 லட்சம் செலவில் பேசாலை ஆஸ்பத்திரி

### அடுத்த மாதம் திறக்கப்படும்

(மன்னார்)

கடந்த ஏழுவருடங்களுக்கு முன்னர் பேசாலையில் ஒருங்கிணைந்த அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 19 லட்சம் ரூபா செலவில் நிர்மாணித்த பேசாலை வைத்திசாலை அடுத்த மாதம் நடுப்பகுதியில் திறக்கப் படவிருக்கிறது.

பேசாலை மக்கள் பிரதிநிதிகள் வவுனியா பிராந்திய சுகாதாரப்பணிப்பாளரை அண்மையில் சந்தித்த போது அவர் இந்த வாக்குறுதியைத் தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கு ஓர் மின்சார இயந்திரமும் அம்புலன்ஸ் வண்டியும் அனுப்பி வைப்பதாகவும் உறுதி அளித்துள்ளார். இச்சந்திப்பில் பேசாலை சிற்றூர் அவை தலைவர் திரு. ஏ. ஏ. குலாஸ் பாடசாலை அதிபர் திரு. எஸ். எம். டயஸ் ஆகியோர் உட்பட பலர் சமுகமளித்திருந்தனர். (85)


### கல்லூரி ஆரம்பம்

யா/சுன்னுகம் இராமநாதன் கல்லூரி இரண்டாம் தவணை ஆரம்பம் (30-4-90) திங்கட்கிழமை என்பதை மாணவர், ஆசிரியர் கவனித்துக்கொள்ளவும்.

(சி 3789) அதிபர்.



நாவற்குழி ஈழநாடு முகவராக

### "சதீஸ் ஸ்ரோர்ஸ்"

நாவற்குழி சந்தி, கைதடி.

நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறியத்தருகின்றேம்.

ஈழநாடு லிமிட்டெட்.

(எ-706)


## பயிற்சி நடைபெறுவதில்லை கடற்றொழிலாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் அமைச்சின் கீழ் இயங்கி வரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் 1984-ம் ஆண்டுக்கு பிறகு கடற்றொழில் பயிற்சி வகுப்புகள் நடைபெறவில்லை.

இதனால் வடக்கு கிழக்கு இளையதலைமுறை கடற்றொழிலாளர்கள் பாதிப்படைந்து வருகிறார்கள். நவீன முறை மீன் பிடிகளையும் உபகரணங்களையும் பற்றியும் நன்கு அறிய முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

நீர்கொழும்பு, தங்காலை ஆகிய இடங்களில் சிங்கள மொழி மூலம் கடற்றொழில் பயிற்சி வகுப்புக்கள் இன்றும் நடைபெற்று வருகிறது குறுப்பிடத்தக்கது.

யாழ். கடற்றொழில் பயிற்சி நிலையம் யாழ். மூன்றும் குறுக்குத் தெரிவிலுள்ள தனியார் வீட்டில் அலுவலகம் திறந்துள்ளது. அதில் ஒரு தற்காலிக அதிபரும் ஒரு செயல் முறை காட்டுநரும், மூன்று சிற்றூழியர்களும் கடமையாற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (153)

## கான்டஸ்பிள் தற்கொலை

(நுவரெலியா)

பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஆர். எம். திலகரத்தின என்பவர் தன்னைத்தானே துப்பாக்கியினால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

அட்டன் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் விசாரணை மேற்கொண்டுள்ளார். (127)

## கடற்றொழிலாளர் பிரச்சனை 28ம் திகதி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளரின் பிரச்சனைகளும் எதிர்கால நடவடிக்கைகளும் என்றஅடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரும், கடற்றொழில், கூட்டுறவுத் திணைக்கள உயரதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து நடாத்தவிருக்கும் கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மனோஹரா படமாளிகையில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர், கடற்றொழில் திணைக்கள உயரதிகாரிகள், கூட்டுறவுத்துறை உயரதிகாரிகள், கடற்றொழில் கூட்டுத்தாபன உயரதிகாரிகள், யாழ் மாவட்ட மாதிரி நிர்வாக செயலக பொறுப்பாளர், யாழ். மாவட்ட மாதிரி நிர்வாக செயலக கடற்றொழில் பகுதி பொறுப்பாளர் ஆகியோர் கலந்துரையாடலில் கலந்துகொள்வார்கள் எனத் தெரியவருகிறது.

இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சகல கடற்றொழிலாளர் சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (153)

# தோல்வியுற்ற சதிப்புரட்சியில் ஈடுபட்ட
# 30 ராணுவ அதிகாரிகளுக்கு சிரச்சேதம்

[காட்டூம்]

**சூடானில் ஜெனரல் ஓமார் ஹஸன் அல் பஷீரின் இராணுவ ஆட்சியை சதிப்புரட்சிமூலம் கவிழ்க்க முயன்ற 30 இராணுவ உயரதிகாரிகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு சிரச்சேதம் செய்யப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது. இவர்களுக்கு உதவிய நூற்றுக் கணக்கான இராணுவ வீரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

இராணுவ அதிரடி நடவடிக்கை மூலம் இச் சதிப்புரட்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஜெனரல் பஷீரின் விசுவாசப் படையினர் இதனை சுலபமாக முறியடித்துள்ளனர். நேற்று முன்தினம் இம் முயற்சி முறியடிக்கப்பட்டது.

இதற்கு காரணமாயிருந்த 50 இராணுவ உயரதிகாரிகள் உடனடியாக சுற்றிவளைக்கப்பட்டு பலத்த சண்டையின் பின் கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். இவர்களில் 30 அதிகாரிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

மரண தண்டனை விதிக்கப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டவர்களில் 3 மேஜர்ஜெனரல்களும், 2 பிரிகேடியரும், 5 கேர்ணலும் 20 ஏனைய அதிகாரிகளும் அடங்குவர். மற்றைய 20 அதிகாரிகளுக்கும் மரணதண்டனை விதிக்கப்படலாமெனவும் தெரியவருகிறது.

ஜெனரல் பஷீரின் ஆட்சியை கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது புரட்சி நடவடிக்கை இதுவெனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி நடவடிக்கையின் போது நடைபெற்ற கடும் யுத்தத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் பல பொதுமக்களும் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உடனடியாக நாடுமுழுவதிலும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்ட போதிலும் 24 மணி நேரத்தின் பின் ஊரடங்கு முற்றாக வாபஸ் பெறப்பட்டு தற்போது நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## கும்பாபிஷேகம்

(புலோலி)

கண்டாவளை கோணங்குளம் சித்திவிநாயகர் ஆலய எழுந்தருளி மூர்த்திகளான பிள்ளையார் அம்மன், வைரவர் ஆகிய உற்சவ மூர்த்திகளுக்கு நாளை வெள்ளிக்கிழமை நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

(61)

## ரயில் - பஸ் இணைப்பு சேவை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ரயில் இணைப்பு பஸ் சேவைகள் இப்பொழுது ஒழுங்காக நடைபெறுகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மிகவும் அக்கறையுடன் இந்தச் சேவைகளில் ஒத்துழைப்பு வழங்கி வருவதாக யாழ். பிரதம ரயில் நிலைய அதிபர் தெரிவித்தார்.

(153)

## பறவைகளும், விலங்குகளும் யாத்திரை சென்று பட்டினி கிடந்து தற்கொலைசெய்யும்பரிதாபம்

(புதுடில்லி)

இந்தியாவில் அஸாம் மாநிலத்தில் ஜாடிங்கா என்னுமிடத்தில் பறவைகளும், விலங்குகளும் கூட்டம் கூட்டமாக வந்து எதுவும் சாப்பிடாமல் பட்டினி கிடந்து தற்கொலை செய்கின்றன.

கடந்த பலவருடங்களாக இவ்வாறான சம்பவம் இடம்பெற்று வருகிறது. பொதுவாக மாரிகாலங்களிலேயே அவை இவ்வாறு தற்கொலை செய்கின்றன.

அதேபோன்று தென் ஆபிரிக்காவில் மான்கள் கூட்டம், கூட்டமாக வந்து தற்கொலை செய்வதாகவும் தெரியவருகிறது.

யூரல் மலைப் பிரதேசத்தில் அணில்கள் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் தற்கொலை நடவடிக்கையில் இறங்குகின்றன. இவை முதலில், ஆயிரக்கணக்காக சேர்ந்து நீண்ட தூரம் ஊர்வலம்போல் செல்லுகின்றன. இதன்போது வழியில் ஏராளமான அணில்கள் இறந்துபோக நாய்களும், நரிகளும் தின்று சலித்துப்போல பின் மீதி தற்கொலை செய்கின்றன.

1847ல் சுமார் 2 லட்சம் அணில்கள் ஜென்ஸி ஆற்றில் குதித்து தற்கொலை செய்ததாகவும் 'விலங்கின பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது. இதே போல் விலங்குகளும், எலிகளும் கூட்டம், கூட்டமாக பயணம் செய்து முடிவில் பாறைகளிலிருந்து கடலில் வீழ்ந்து இறக்கின்றன.

விலங்குகள் தற்கொலை செய்வதற்கு ஆராய்ச்சியாளர்கள் மூன்று காரணங்களை தெரிவித்துள்ளார்கள், இனப்பெருக்க கட்டுப்பாடு. வாழ்விடங்கள் பற்றாக்குறை, சூரியப்புள்ளிகள் அதனால் விளையும் பருவகாலமாற்றங்களென தெரிவித்துள்ளனர். (சி)

## உடுவில் சிறுவர் நூலகத்தை இயங்கவைக்க ஏற்பாடு

(உடுவில்)

யாழ்ப்பாணப் பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்தில் உள்ள சிறுவர் நுலகத்தை புனரமைப்பு செய்வது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. எஸ். சுணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

அண்மைக்கால அசம்பாவிதங்களால் சீர்குலைந்திருந்த மேற்படி நூலகத்தை மிக விரைவில் இயங்க வைப்பதற்கான ஆலோசனைகள் அங்கு தெரிவிக்கப்பட்டன.

மருதனுமடம் கோட்டக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் பாடசாலை அதிபர்கள், கல்விமான்கள் பலரும் தமது கருத்துக்களை அங்கு தெரிவித்தனர்.

சிறுவர்களுக்கான நூல் நிலையத்தை சீராக இயங்கவைப்பதற்காக உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரன், தவாடி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு. அனு. வை. நாகராசன், உடுவில் முருகமூர்த்தி வித்தியசாலை துணை அதிபர் திரு. வி. பரிபூரணானந்தசர்மா, இளைப்பாறிய அதிபர் திரு. சச்சிதானந்தம், பண்டிதர் நடராசா உள்ளூராட்சி திணைக்கள சனசமூக நிலைய உத்தியோகத்தர் திரு. எஸ். கந்தசாமி நூலகச் செயலாளர் செல்வி ம. கந்தசாமி ஆகியோர் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

உடுவில் உப அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான புத்தகக் கண்காட்சி யொன்றினை ஒழுங்கு செய்து இரண்டாம் தவணை முடிவடைவதற்கிடையில் நடாத்துவது என்றும், அத்துடன் கிராமியகலை நிகழ்ச்சியினையும் ஒழுங்கு செய்வதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புத்தகக் கண்காட்சி, கிராமியக்கலை நிகழ்ச்சிகளை நடாத்துவது சம்பந்தமான ஆரம்ப நடவடிக்கை கூட்டத்தை மே மாதம் 3-ம் திகதி பிற்பகல் நடத்துவதென்றும், உடுவில் உப அலுவலக பிரதேசத்துக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(109)

## யாழ். நகரில் மின் தடை

(யாழ்ப்பாணம்)

அவசிய திருத்த வேலைகள் காரணமாக சுன்னுகம் – யாழ்ப்பாணம் 33 கே. வி. லைனில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்தடை ஏற்படும் என்றும் யாழ். நகரின் அதிகமான பகுதிகளில் மின்சாரம் இருக்காது என்றும் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

(91)

## சோவியத் யூனியன் மீது பொருளாதாரத் தடை உடனடியாகஇல்லை! — ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

சோவியத் யூனியன் மீது உடனடியாக பொருளாதார தடை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாதென அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

இது குறித்து மேலதிக முடிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்பே அடுத்த நடவடிக்கை என்ன என்பது குறித்து அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்;

லிதுவேனியா மீது சோவியத் மேற்கொண்டுள்ள பொருளாதாரத் தடை நடவடிக்கைக்கு எதிராக சோவியத் யூனியன் மீது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார தடையை விதிக்கவுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இது குறித்து காங்கிரஸ் சபையில் பலமணி நேரம் நடைபெற்ற மேலதிக கூட்டத் தொடரையடுத்து அதிபர் புஷ்ஷின் தடை நடவடிக்கை வாபஸ் பெறப்பட்டுள்ளது.

என்ன காரணத்தினுல் இந்த நடவடிக்கை வாபஸ் பெறப்பட்டதென்று இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

எனினும் இவ்விவகாரம் மூலம் சோவியத்துடன் மீண்டுமொரு பனிப்போரை ஏற்படுத்திக் கொள்ள காங்கிரஸ் சபை விரும்பாத காரணத்தினுலேயே இது வாபஸ் பெறப்பட்டதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

இதேவேளை அமெரிக்காவின் தடை நடவடிக்கை அறிவிப்பையடுத்து சோவியத் லிதுவேனியாவின் சகல எல்லைப் புறங்களிலும் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது. கடற் பகுதியிலும் பெருமளவு படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். லிதுவேனியா மீதான தனது கடும் பிடியையும் சோவியத் இறுக்கியுள்ளது. (சி)

## எகிப்துக்கு 700 டாங்கிகள் அமெரிக்கா அன்பளிப்பு

(கெய்ரோ)

எகிப்துக்கு 700 டாங்கிகளை அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இதன் முதற் கட்டமாக 300 டாங்கிகள் எகிப்துக்கு வந்துசேர்ந்துள்ளன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வாபஸ்பெறப்படும் அமெரிக்கா எம்60, ஏ–1 டாங்கிகளே இவ்வாறு எகிப்துக்கு அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மிகுதி 400 டாங்கிகளும் அடுத்த சில தினங்களுள் எகிப்துக்கு வந்துசேரும் என்றும், இதன் மூலம் எகிப்தின் பாதுகாப்பை பலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் எகிப்து, இராணுவத்தை புனரமைப்பு செய்யும் நடவடிக்கையில் விரைவில் ஈடுபடவுள்ளதாகவும் வெளிநாடுகளிலிருந்து பெருமளவு இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்யவும் வீரர்களுக்கு நவீன பயிற்சியளிக்க வெளிநாட்டு உதவிகள் கோரப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (சி)

## ஐரோப்பிய பாராளுமன்றம் தலாய்லாமாவுக்கு அழைப்பு சீனு கண்டனம்!

(பீக்கிங்)

திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவிற்கு ஐரோப்பிய பாராளுமன்றம் விடுத்த அழைப்பை சீனு வன்மையாகக் கண்டித்துள்ளது.

திபெத்தில் மனிதஉரிமைகள் மோசமாக மீறப்படுவதை வெளியுலகிற்கு காட்ட தலாய்லாமா ஐரோப்பிய பாராளுமன்றில் உரையாற்ற வேண்டுமென்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

மேற்படி அழைப்பை வன்மையாக கண்டித்துள்ள சீனு உள்நாட்டு விவகாரத்தில் எந்தவொரு நாடும் தலையிடுவதை சீனு அனுமதிக்காதென்றும் கடுமையாக எச்சரித்துள்ளது.

இந்த அழைப்பை உடனடியாக வாபஸ்பெற வேண்டும் என்றும் சீனு கோரியுள்ளது. எனினும் இந்த அழைப்பு

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

உண்மை கூறுவோர் இம்மையிற் புகழும் மறுமையில் மேலான உலகமும் பெறுவர்.

— மநுதர்மநீதி.

## நமது நோக்கு

# இன்னுமா அங்கு இப்படி?

வடக்குக் கிழக்குப் பகுதிகள் சென்ற சில ஆண்டுகளாகச் சீராக இயங்கவில்லை: அடுத்தடுத்து வந்த இன்னல்களால் பல மாணுக்கரும் ஆசிரியர்களும் அகதிகளாயினர்.

பாடசாலைக் கட்டடங்கள் குண்டுத் தாக்குதலினுற் பாதிப்புற்றன; உபகரணங்கள் பல சேதமாகின.

சில பாடசாலைகள் முகாம்களாக மாறின; சில பாடசாலைகளுக்கு அருகே முகாம்கள் அமைந்திருந்தன.

கற்பதற்கேற்ற மனநிலையிருந்தாலும், பாடசாலைகளின் வசதிகள் மிக அருகிவிட்டன.

சர்வதேச மட்டத்தில், இப்பகுதி மாணுக்கரின் கல்வி வளர்ச்சியை ஓரளவிற்காயினும் சீரடையச் செய்ய வெளிநாடுகள் முன்வந்தன.

கட்டடங்களுக்கு என நிதி வந்தது; தளபாடங்களுக்கும் உபகரணங்களுக்கும் உதவி வந்தது.

குறிப்பாக யூனிசெவ், சீடா போன்ற ஸ்தாபனங்களின் மான்யத் திட்டத்தின் கீழ், பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான கல்வி, விவசாய உபகரணங்கள் வந்தன.

இவை எங்கே? வடக்கு, கிழக்குப் பாடசாலைகட்கு விநியோகிக்கப்பட்டனவா?

''ஒரு கண்ணிற் சுண்ணும்பு...!'' என்ற மனப்போக்கு இடைமட்டத்தில் இன்னும் மாறவில்லையா?

கொழும்பு நாரஹென்பிட்டியாவிலுள்ள களஞ்சியச் சாலையில் அவை தேங்கியுள்ளன.

பக்குவமாக, பாதுகாப்பாக இருந்தாலும் பரவாயில்லை; சற்றுத் தாமதித்தாவது எடுக்கலாம்,

ஆனல் அங்கு நடப்பது என்ன? பாராமுகப் போக்கினுல், அவை பழுதடைந்து போகின்றன.

கொழும்புப் பத்திரிகை நிருபர் போய்க் கண்ட காட்சி வேதனையளிப்பதாக உள்ளது.

பெறுமதிவாய்ந்த தளபாடங்கள், புத்தகங்கள், உழவு இயந்திரங்கள், தட்டச்சுக்கள், விஞ்ஞான உபகரணங்கள் மழையில் எவ்வித பாதுகாப்புமின்றி விடப்பட்டிருந்தன.

ஆசிய வங்கியின் உதவியாற் பெறப்பட்ட 80 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் 1988 முதல் இங்கு வீணுக வீசப்பட்டுள்ளன எனச் செய்திகள் கூறுகின்றன.

மண்வெட்டிகள். விவசாயக் கல்விக்கான கத்திகள் துருப்பிடித்து வருகின்றன.

கொரியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட 53 கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள், 43 தொலைக் காட்சி டெக்குகள், 50க்கு மேற்பட்ட வானெலிப் பெட்டிகள், நுணுக்குக் காட்டிகள், கொப்பிகள், மின்சார அடுப்புகள் - இப்படிப் பழுதடையும் பொருட்களின் அட்டவணை நீண்டுகொண்டு போகிறது.

இதைவிட, பொதி அடைப்புகள் ஓரளவு திறந்து காணப்பட்டமை எதனை யூகிக்கவைக்கிறது?

விநியோகம் பற்றிய பதிவுகள் கூடச் சீராகப் பேணப்படவில்லை.

கணக்காளர் நாயகம் களஞ்சியசாலைக்குத் திடீர் விஜயம் செய்திருக்கிருர். விளைவு? கல்வியமைச்சர் லலித் துரிதமாகச் செயற்பட்டிருக்கிருர்; களஞ்சியசாலைப் பொறுப்பாளர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார்.

ஐக்கிய இலங்கை, அண்ணன், தம்பி, இன ஒற்றுமை என்றெல்லாம் கூறி, புண்ணை ஆற்றுவதற்கு ஒருபக்கம் முயற்சிகள் நடக்கும்போது, அங்கிருந்து வரும் இத்தகைய செய்திகள் ''இன்னுமா அங்கு இப்படி?'' என்று கேட்கவைக்கின்றன என்பதை வேதனையோடு கூறிவைக்க விரும்புகிருேம்.

### இன்று தந்தை செல்வாவின் 13-வது சிரார்த்ததினம்

# தந்தை செல்வாவின் கண்ணியமான அரசியல்

தந்தை செல்வா நடாத்திய கண்ணியமான அரசியலும், அவரது நேர்மையும், வாய்மையும் அவரது அரசியல் எதிரிகளாலும் எப்போதும் மதித்துப் போற்றப்பட்டது,

முன்னுக்குப் பின் முரணுகப் பேசுகின்ற அல்லது நடக்கின்ற சுபாவம் தந்தை செல்வாவிடம் என்றைக்குமே இருந்ததில்லை.

ஆட்சேபித்தவராக ஸ்ரீலங்காவின் தலைநகர் கொழும்பில் தானே தமது மோட்டார் வண்டியில் யாழ்ப்பாண ராசதானியின் கடைசி மன்னன் சங்கிலியனின் நந்திக் கொடியைப் பறக்கவிட்டிருந்தார்.

தமிழர்கள் எதையும் முதவில் எதிர்ப்பார்கள்; ஆயின் காலப்போக்கில் அனைத்தையுமே ஏற்றுக்கொள்வார்கள் என்ற கருத்து தென்னிலங்

## சா. ஆ. தருமரத்தினம்

இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டதாகப் பகன்றவர்கள் காலனி ஆட்சிக்கு முன் இத்தீவில் மூன்று தனித்தனியான அரசுகள் தனிக்கொடிகளை உடையவையாகவிருந்ததை ஏனே மறந்து அவற்றுள் ஒன்ருன கண்டி ராசதானியின் கடைசி மன்னுன இராஜராஜசிங்கனுல் உபயோகிக்கப்பட்டுவந்த வாளேந்திய சிங்கக் கொடியை இத் தீவின் தேசியக் கொடியாகக் கொண்டுவர எத்தனித்தபோது, அச்செயலை கையில் நிலவியதுண்டு ஒரு காலகட்டத்தில்.

தந்தை செல்வாவோ அதற்கு முற்றிலும் விதிவிலக்கானவர் என்பது மட்டுமன்றி தமிழ் மக்களையும் அவ்வாறு மாற்றியமைத்த பெருமை அவருடையதே!

இந்திய வம்சாவழியினராகிய மலையகத் தமிழர்களது குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அதனை ஆட்சேபித்து ''இன்று இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு, நாளை இலங்கைத் தமிழர்களுக்கு, மொழிப்பிரச்சனை வரும்போதுதான் அது உணரப்படுமென்று கூறினர்.''

தமிழ் மக்கள், சிலாபம், நீர்கொழும்புத் தமிழர்களுக்கு நேர்ந்தது போன்று இனமழியாது காக்கப்பட வேண்டுமாகில் அவர்கள் தமது தனித்துவத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். அதற்கு அவர்களது மரபு வழித்தாயகம் அரச செலவில் நடாத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களால் பறிபோகாது காக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை வலியுறுத்தப்பட்டு இத்தீவில் ஒரு தமிழரசு நிறுவப்படல் அவசியம், அந்தத் தமிழரசை சிங்கள மக்களின் இணக்கத்தோடு சமஷ்டிக் கூட்டாட்சிக்கு அமைந்ததாகப் பெறுவதற்கு தந்தை செல்வா அயராது சோராது பாடுபட்டார். இரு சிங்களப் பிரதமர்களுடன் இடைக்கால ஒப்பந்தங்களையும் செய்து கொண்டார்.

பிரதேச சுயாட்சியைத்தானும் தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை என்பதை இரு இடைக்கால ஒப்பந்தங்களும் உடைத்தெறியப்பட்ட அனுபவத்தால் நன்கு உணர்ந்து கொண்ட தந்தை செல்வா முன் இருந்ததும் பின்னர் போரில் போர்த்துக்கேயரிடம் களத்தில் இழக்கப்பட்டதுமான இறைமையும் சுதந்திரமும் உடையதான தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்பதற்கு உறுதி பூண்டார். காங்கேசன்துறை இடைத்தேர்தல் வெற்றியின் பின் நாடாளு மன்றத்தில் தாம் நிகழ்த்திய கன்னிப் பேச்சில் அதனையே தமிழீழ மக்களுக்கு தமது மரணசாசனமாக விட்டுச் சென்றுள்ளார்.

### ரயில் நிலைய சிற்றுண்டிச்சாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். ரயில் நிலையச் சிற்றுண்டிச்சாலை கடந்த வாரம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இதனுல் ரயில் பயணிகள் பெரும் பயன் அடைகிருர்கள். (153)

## பெரியார் மு. வைரமுத்து

அண்மையில் காலமான பெரியார் மு. வைரமுத்து அவர்கள் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய பின்னர் மானிப்பாயில் இந்துசமய விருத்திச்சங்கத்தினை ஆரம்பித்தார். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட சங்கம் இப்போது கிளைகள் விட்டு சுதுமலை, நவாலி, சண்லிப்பாய், ஆனைக்கோட்டை எனப்பரந்துள்ளது.

மானிப்பாய் இந்துசமய விருத்திச்சங்கத்தின் தலைவராக இருந்து மானிப்பாய் மக்களுக்கு அருந்தொண்டாற்றினுர். வேலக்கைப்பிள்ளையார் கோயிலை மையமாகக்கொண்டு சைவமத கலாச்சாரத்தை வளர்த்தார், குருபூசைகள் காலத்தில் உழவாரத்திருப்பணி மூலம் ஆலயச் சுற்ருடல் துப்பரவாக்கப்பட்டது வெள்ளிக்கிழமை தோறும் தேவார பாராயணம் செய்யப்பட்டது.

ஆலயத்தில் சமயகுரவரின் விக்கிரகங்சள் இல்லாதபோது சைவப்பெருமக்களை நாடிப் பொருள்பெற்று நால்வரின் உருவங்களை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வித்தார். 1966ம் ஆண்டு நால்வர் உருவங்கள் வைக்கப்பட்டு குருபூசைகளும் முறையாக நடத்தப்பட்டன. இப்போதும் அந்தஉபயகாரரே குருபூசைகளை நடாத்துகிருர்கள்.

சைவசமய வகுப்புக்கள்சனி, ஞாயிறு தினங்களில் மானிப்பாய் இந்துக்கல்லூரி வகுப்பறைகளில் இலவசமாக நடத்தப்பட்டன. பண்ணிசை வகுப்புக்களும்நடைபெற்றன. வளர்ந்தோருக்கென பெரிய புராண வகுப்புகள் காலம் சென்றவித்துவான்கே.கே.நடராசன் தலைமையில் நடைபெற்றன.

வருடந்தோறும் மாணவர்களுக்கு பரீட்சைகள் நடாத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன. பரிசளிப்பு விழாக்கள்மானிப்பாய் இந்துக் கல்லூரி வாகீசர் மண்டபத்தில் வருடந்தோறும் நடைபெற்றன.

விழாக்கள் ஒழுங்காகவும், நேரந்தவருமலும் நடைபெற வேண்டும் என விரும்பிய பெரியார் அடிக்கடி மக்களுக்கு சைவநெறிபற்றி சொற்பொழிவுகள் நடாத்தினர்.

கந்தபுராணம், பெரியபுராணம் பற்றிய சொற்பொழிவுகளை காலஞ்சென்ற திரு. நல்லையாவைக்கொண்டுவேலக்கையில் நடாத்தினுர். தாமும் ஆலய பூசைகளில் கலந்து கொண்டு பஞ்சபுராணங்கள் பாடி இறைவனைவழிபட்டார்.

முதலியார் மகேசனுல் ஆரம்பிக்கப் பட்ட சைவச் சிறுர்களுக்கான அனுதை இல்லத்துடன் தொடர்புகொண்டு அதன் நிதி நிலைமைபற்றிக் கண்ணுங் கருத்துமாயிருந்தார் வதிரி என்னும் இடத்திலும் ஒரு சைவ அனுதை இல்லத்தை திறம்பட நடத்திவந்தார்.

அன்னுரின் சேவை மிகவும் பாராட்டிற்குரியது.

சி. குமாரசாமி
(செயலாளர், இந்து சமய விருத்திச்சங்கம், மானிப்பாய்.)

## பலதும் பத்தும்

### திருவாளர் சூழலியல்!

கனடாவைச் சேர்ந்த மோரிஸ் ஸ்ரோங் என்பவர் தான் சூழற்பாதுகாப்பப்பற்றிய சர்வதேச விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்களில் முன்னணியில் உள்ளார்.

சூழல் பற்றிய முதற் சர்வதேச மாநாடு 1972ல் நடந்தபோது இவர் அதன் பிரதம செயலாளர்.

ஐ. நா. சூழற்பாதுகாப்பு இயக்கத்தின் தந்தை என அவரைப் போற்றுகிருர்கள்; திருவாளர் சூழலியல் (Mr. Ecology) எனச்செல்லமாக அழைக்கிருர்கள்.

தற்போது... அவரை மீண்டும் ஐ. நா. சபையின் சேவைக்கு அழைத்திருக்கிருரிகள். எதற்காக...?

1992ல் இரண்டாவது சர்வதேச சூழற்பாதுகாப்பு மகாநாட்டை பிரேசிலில் நடாத்தவுள்ளார்கள். அதனைத் திறம்பட நடாத்தப் பொருத்தமானவர் இவர் தாஞம்!

1985ல் ஆபிரிக்காவிலே, ஐ. நா. அவசர நடவடிக்கைக் குழுவின் பிரதான இணைப்பாளராகக் கடமையாற்றியவர், ஒருமுறை உலக வங்கியின் பிரதிக்கவர்னராகவும் பணிபுரிந்திருக்கிருர்.

தற்போது, ஐ. நா. சங்கங்களின் உலகப்பொது அமைப்புத் தலைவராகக் கடமையாற்றி வருகிருர்.

அவர் விடுத்த எச்சரிக்கை என்ன? ''பூமியினதும், உயிரினங்களினதும் எதிர்காலம் இருள் சூழ்ந்துள்ளது. எனவே சர்வதேச உடன்படிக்கைகள் மூலம் பூமி காப்பாற்றப் படவேண்டும்!''

வாணி

# சிதைந்தநிலையில்காணப்படும் டச்சுத் தேவாலயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டையில் அமைந்துள்ள டச்சுத் தேவலாயக் கட்டிடம், கடந்த கால வன்செயல் காரணமாக சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது.

மேல் கூரைகள், கட்டிடங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த டச்சுத் தேவாலயம் கிரேக்க சிற்பமுறையை அனுசரித்துக் கட்டப்பட்டதாகும். உயரமான கூரைகளையும் பெரிய ஜன்னலகளையும் அகலமான விருந்தைகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. அதனுடன் தொல்பொருள் திணைக்களத்தினுல் தொல்பொருள் பாதுகாப்பிடமாகவும்இது பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

1984 ஆண்டுக்கு முன்னர் யாழ். தொல் பொருள் திணைக்களப்பகுதியினர் இத்தேவாலயத்தை பராமரித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (153)

### அஞ்சலி

(காங்கேசன்துறை)

அமரர் தந்தை செல்வாவின் நினைவு தினத்தை யொட்டி இன்று வியாழக்கிழமை அஞ்சலி நிகழ்ச்சி இடம்பெற உள்ளது.

தெல்லிப்பழை கிறீஸ்தவ சேமக்காலையில் உள்ள அன்னுரின் சமாதியில் மலர் அஞ்சலி செய்து பிரார்த்தனை மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (86)

# பிரச்சனைக்குத் தீர்வுகாண 20 அம்சத் திட்டம்

## சர்வகட்சி மாநாடு சமர்ப்பித்தது

(கொழும்பு)

இன்று நாடு எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டுமாயின் சகல சக்திகளிடையேயும் கருத்து ஒற்றுமை ஏற்படவேண்டும். இதற்கு 20 இலட்சியங்கள் முக்கியமானவையென்று சர்வகட்சிமாநாடு இனம் கண்டு அரசுக்கும் மக்களுக்கும் சமர்ப்பித்துள்ளது.

அவையாமன:-

* அதிகாரப்பரவலாக்கல்.
* தேர்தல் தொகுதிச் சீர்திருத்தல்.
* வர்வஜனவாக்குரிமை.
* விகிதாசாரப் பிரதிநிதித்துவம்.
* சிறுபான்மையோரின் பிரதிநிதித்துவம்.
* வெகுஜன தொடர்புசாதனங்கள் சம்பந்தமான தாராளக் கொள்கை.
* மொழிக்கொள்கையைச் செம்மையாக அமுல் செய்தல்.
* கல்விச்கொள்கை.
* சமத்துவம், சகோதரத்துவம்.
* தேசிய காணிக்கொள்கை அமுல்.
* ஜனநாயக நடைமுறையைப் பலப்படுத்துதல்.
* சகலரையும் சமமாகப் பாவித்தல்.
* அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்.
* நாட்டின் சகல மக்களுக்கும் பாதுகாப்பளித்தல்.
* கட்சிவிட்டுக் கட்சிமாறும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தல்.
* பாராளுமன்ற ஆலோசனைச் சபைகளின் முடிவுகளை அமுல் செய்தல்.
* பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு பட்டவாக்க உத்திபோகத்தர்களை நியமித்தல்.
* மாகாணசபைகளில் நாற்பது சதவீதமான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வாக்காளர்களை தேர்தல் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்தல்.
* மாகாணசபைக்கான வேட்பாளர்களை நியமிக்கும் போது, 40 சதவீத வேட்பாளர்கள் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பதைச் சகலகட்சிகளுக்கும் வலியுறுத்தல்.
* கிராமோதய, பிரதேசசபைகளுககான அங்கத்தவர்களின் எண்ணிக்கையை 40 சதவீதத்தினால் அதிகரிக்கப்படுவதுடன் கட்சி சார்பற்றமுறையில்தேர்தல் நடாத்தி அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் ஆகியனவாகும். (அ)

# அர்ச்சகர்கள் இல்லை பூட்டப்பட்ட நிலையில் இந்து ஆலயங்கள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்குப் பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்கள் கடந்த பல நாட்களாக பூட்டப்பட்ட நிலையில் உள்ளன.

இந்த ஆலயங்களுக்கு அர்ச்சகராகப் பணியாற்றி வந்தவர் வெளியூர்சென்று திரும்பி வராமையே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள இரண்டு பெரிய ஆலயங்களில் மூன்று நேரப் பூசையும் மற்றைய ஆலயங்களில் ஒருநேர பூசையும் நடைபெற்று வந்தன.

அர்ச்சகர் இல்லாமையினால் பக்தர்களும், நேர்த்தியை நிறைவேற்றுபவர்களும், அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளனர்.

ஆலயங்கள் தொடர்ந்து பூட்டப்பட்டிருந்து மீண்டும் பூசைகள் தொடங்கின் பாலஸ்ஸ்தாபனம் செய்தல் வேண்டும் என்றும் இதனால் ஆலய நிர்வாகங்களுக்கு அதிகசெலவாகும் என்றும் ஆலய தர்மகர்த்தாசபை பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (133)

# 14ம் திகதி முடிவு நாள்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. பத்திர (உயர்தர)ப் பரீட்சை 1990 ஆகஸ்ட் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 1990 மே மாதம் 14ம் திகதியாகும்.

குறிப்பிட்ட திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது எனத் தெரிய வருகிறது.

இம்முறை யாழ். மாவட்டத்தின் சாவகச்சேரி, யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, பருத்தித்துறை ஆகிய நகரங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட நகரங்களாகும். க. பொ. த. பத்திர (உயர்தர)ப் பரீட்சை 1990 ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து ஆகஸ்ட் 20ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. (153)

# ஊக்குவிப்பு பணம்

(மன்னார்)

வன்செயல்காலத்தில்பொது மக்களுக்கு அளப்பரியவேலைகள் செய்துவந்த மன்னார் மாவட்ட தபால் கந்தோர் உப தபால்கந்தோர் ஊழியர்களுக்கு இதுவரையிலும் ஊக்குவிப்பு பணம் வழங்கப்படவில்லை. ஏனைய ஊழியர்கள் கிழமையில் மூன்றுநாட்களும் 5 நாட்களும் வேலைசெய்தவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் வேளையில் இரவு பகல் குறிப்பாக கிழமையில் 7 நாட்கள் வேலைசெய்த இந்த ஊழியர்களுக்கு வழங்கப்படாதது மிகவும் வேதனைக்குரிய விடயம் என்று மன்னார்தபால் நிலையத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நீர் விநியோகம்

(மன்னார்)

மன்னாரில் தறசமயம் தண்ணீர் விநியோகம் நல்ல முறையில் நடைபெற்றாலும் சில இடங்களில் குழாய்கள் பொருத்துவதற்குக் கஷ்டமாகவே உள்ளது. இதனை சீராகச் செய்து நகரம் முழுவதும் சகல வீடுகளுக்கும் குழாய் பொருதுவதற்கு மேலும் 3 மில்லியன் நிதி தேவைப்படுகின்றது. இதனை அரசு வழங்கினால் எவ்வித பிரச்சனையுமிராது என மன்னார் தண்ணீர் விநியோகச் சபையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## தலைமன்னார்-இராமேஸ்வரம் கப்பல்சேவை

# திருத்த வேலைகளினால் மேலும் தாமதம்!

(மன்னார்)

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது சம்பந்தமாக இறங்குதுறையிலுள்ள பால வேலைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அண்மையில்தலைமன்னாரில் நடைபெற்ற உயர்மட்ட மகாநாட்டில் யாழ்ப்பாணம் சுங்கக்கலெக்டர் திரு. கணேசலிங்கம், மன்னார் அரச அதிபர் திரு.ஏ. ஸி. செபநாயகம், தலைமைப்பீட உதவி அரசஅதிபர் திரு. எஸ், எம். குரூஸ், மற்றும்இராணுவ இணைப்பதிகாரி, பொலிஸ்அதிகாரிகள், குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தலைமன்னார் இறங்குதுறை கப்பல் கட்டும் பகுதியில் 40 அடி நீளமான பாலத்தின் ஒரு பகுதி ஏற்கனவே கடலுக்குள் விழுந்துவிட்டது. மேலும் 60 அடி நீளமான ஒரு பகுதி சேதமாகவுள்ளது.

இவற்றைத் திருத்தம் செய்ய அதிக நாட்கள் தேவைப்படும் என்றும் இப்போதைக்கு கப்பல் சேவை நடைபெறுவது சாத்தியமில்லை என்றும் மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. (85)

# நாளை கலந்துரையாடல்

(காங்கேசன் துறை)

யாழ் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள்பங்குபற்றும் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஏற்பாடு செய்துள்ள இக் கலந்துரையாடலுக்கு கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தலைமை வகிப்பார்.

கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் கூட்டுறவு தினவிழா உட்பட பல விடயங்கள் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட உள்ளன. (86)

# ஐ.நா. புனருத்தாரண குழு பருத்தித்துறைக்கு விஜயம்

## நடவடிக்கைக்கும் ஏற்பாடு

(பருத்தித்துறை)

கடந்த காலங்களில் இராணுவ நடவடிக்கைகளால் சீரழிந்த பகுதிகளைப் பார்வையிட ஐக்கிய நாடுகள் புனருத்தாரண உதவி சர்வதேச குழு, பிரதிநிதி திரு. ரொபேர்ட் இங்கிலண்ட் தலைமையில் பருத்தித்துறைக்கு விஜயம் செய்தது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், புனரமைப்புப் பகுதியைச் சேர்ந்த திரு. கே. சற்குணலிங்கம், திரு. ஏ. எஸ். சிவானந்தம், திரு. எஸ். பரமலிங்கம் உட்பட இன்னும் பல அதிகாரிகளும் இக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். இக் குழுவினர் பருத்தித்துறைப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் சீரழிந்த பகுதிகளைப் பார்வையிட்டனர்.

பருத்தித்துறை உதவி அரச அதிபர் திரு. வை. வேலும்மயிலும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. அ. ஈ. ஐயாத்துரை, பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ். விசாகசுந்தரம் ஆகியோர் இப்பகுதிகளின் இராணுவ நடவடிக்கைச் சீரழிவுகள் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினர்.

இவற்றினைப்பற்றி நன்கு விளங்கிக்கொண்ட ஐக்கிய நாடுகள் புனருத்தாரண உதவி சர்வதேச குழுவினர் பருத்தித்துறையில் சீரழிந்த பகுதிகளை வெகுவிரைவில் புனரமைப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது முக்கியமாகும் என்று தெரிவித்தனர். குழுவினர் புலோலியில் கம்பன் சனசமூக நிலையப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 50 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டத்தையும் பார்வையிட்டனர். அத்துடன் இவ் வீடமைப்புத் திட்டத்திற்கு வழங்கப்படவேண்டிய நிதிகளை உடனுக்குடன் வழங்கி வீடமைப்புத் திட்டத்தை வெகுவிரைவில் பூர்த்தியாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவு பிறப்பித்தனர்.

இது இவ்விதமிருக்க பருத்தித்துறை நகர புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றி யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால, நகர புனரமைப்புக் குழுவுடன் ஆலோசனை நடாத்தினார். பருத்தித்துறை நகரசபையில் இடம்பெற்ற இவ் ஆலோசனைக் கூட்டத்திற்குப் பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. கே. சண்முகநாதன் தலைமை தாங்கினார். (52)

# ஐரோப்பிய

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வாபஸ்பெறப்பட மாட்டாதென பிரிட்டன் அறிவித்துள்ளது. சீனாவின் கண்டனத்தை அது நிராகரித்துள்ளது.

கடந்த வருடம் சீனாவில் 'தியனென்மென்' சதுக்கத்தில் நடந்த படுகொலை சம்பவங்கள் குறித்தும் சர்வதேச மன்னிப்புசபை வெளியிட்ட அறிக்கைக்கும் இச்சந்தர்ப்பத்தில் சீனா கண்டனம் தெரிவித்துள்ளது. (சி)

# கல்வி நிர்வாக சேவையில் அதிகாரிகள் புறக்கணிப்பு

[காங்கேசன்துறை]

இலங்கை கல்வி நிர்வாக சேவையில், 3-ம் தரத்தில் உள்ளவர்களை 2-ம் தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தகமானி அறிவித்தலில் முன்னைய 4-ம் தர நிர்வாகசேவை அதிகாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது குறித்து பெரும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் முன்னர் ஐந்து தரங்கள் இருந்தன. தற்போது இவை மூன்று தரங்களாக குறைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 3-ம் தரத்தில் உள்ள நிர்வாகசேவை அதிகாரிகளை 2-ம் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான அறிவித்தல் வர்த்தகமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் முன்னைய 5 ம் தர கல்வி நிர்வாக சேவைஅதிகாரிகள்கூட மனுச் செய்யலாம் என சேர்க்கப்பட்டுள்ள அதே நேரத்தில் முன்னைய 4-ம் தர கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சேர்க்கப்படாமல் புறக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னைய 5-ம் தரத்தைவிட முன்னைய 4-ம் தர கல்வி நிர்வாகசேவை அதிகாரிகள் தரம் கூடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு புறக்கணிப்புச் செய்யப்பட்ட கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் இந்த முறைகேட்டை நீக்குமாறு கல்விப்பகுதியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். வடக்கு கிழக்கு மாகாண கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கமும் இது விடயத்தை உயரதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது. (86)

# இராசி பலன்

26-04- 1990
வியாழக்கிழமை

மேடம்: நன்முயற்சி, அற்பர் உதவி, செலவுகள் வீண் பழிகேட்டல்.

இடபம்: சாஸ்திர விருப்பு, பவணரவு, நண்பர்விரோதம், செலவு.

மிதுனம்: சத்துருதொல்லைகள் கடினவாக்கு, யாத்திரை, பிடிவாதம்.

கடகம்; குழப்பம், காரியத் தடை மாற்றங்கள், தேக பீடை, செலவுகள்.

சிங்கம்: பிதாவழியினர் உதவி சுபச்செய்தி, தொழிற் சிறப்பு, ஆடம்பரம்.

கன்னி: பிடிவாதம் எதிர்ப்பு யாத்திரை, மனக்குழப்பம் காரியத்தடை.

துலாம்: வெறுப்பு, புதிய திட்டம், அயலவர் பெருமைப் படுதல் சுபச்செய்தி.

விருச்சிகம்; தேகசுகம், கடினவாக்கு, கௌரவம் வைத்தியம், அற்பர்தொல்லை.

தனுசு: ஆலய தரிசனம், வீண்செலவு தொழில் நஷ்டம், அலைச்சல்.

மகரம்: காரியசிந்தை சுபச் செய்தி, படித்தவரின் ஆலோசனை பெறல் ஆலயதரிசனம்.

கும்பம்: வீண்யோசனை, உழைப்பு, சுகம் இடமாற்றம், செலவு.

மீனம்: கடினசிந்தை கௌரவம்புதியவர்வருகை அற்பரால் தொல்லை.

இ. மகாதேவா

# மாணவர் அமைப்புக் குழுவின் கவிதைகட்டுரைபோட்டிமுடிவு

(நேற்றைய தொடர்ச்சி)

(நாவற்குழி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சிப் பிரதேச மாணவர் அமைப்புக்குழு கொத்தணி மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்திய கட்டுரை கவிதைப் போட்டிகளில் கொடிகாமம் கொத்தணியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:-

கட்டுரைப்போட்டி: ஆரம்ப பிரிவில்1. பொ. நகுலாம்பிகை கச்சாய்அ. த. க. பா. 2. இ. ஸ்ரீதேவி கொடிகாமம் அ. த. க. பா, 3. தி. சிவசக்தி மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி, கீழ் பிரிவில் க. கனககீதா கச்சாய் அ. த. க. பா, 2. ம. ஜெயப்பிரதா மந்துவில் அ. த. க. பா, 3. இ. தர்சினி கொடிகாமம் அ. த. க. பா, மத்திய பிரிவில் 1. க. சுபாசினிகச்சாய் அ. த. க. பா, 2. இ. கலைவாணி மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி, 3. க. ஸ்ரீமதி கொடிகாமம் அ. த. க. பா, மேற்பிரிவில் முதல் மூன்று இடங்களையும் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தை சேர்ந்த பொ. பகீரதி, கு. பிரசாந்தி, சி. நிர்மலாதேவி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கவிதைப்போட்டி: ஆரம்டப் பிரிவில் 1. இ. சர்மிளா மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி, 2. ச. தாட்சாயிணி அல்லாரை அ. த. க. பா, 3. நா. புஸ்பா அல்லாரை அ. த. க. பா, கீழ் பிரிவில்: 1. ம. ஜெயப்பிரபா மந்துவில் அ. த. க. பா, 2. கா. சுபைதா மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி, 3. க. கனககீதா கச்சாய் அ. த. க. பா, மத்திய பிரிவில் 1. பொ. மனோகரன், கச்சாய் அ. த. க. பா. 2. ஐ. தேவகி கொடிகாமம் அரசினர் வித்தி, 3. பா. பாலதர்சினி கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி, மேற்பிரிவில் 1. இ. சிவராணி கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.

## பளை கொத்தணி

பளை கொத்தணியில்வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

கட்டுரைப்போட்டி ஆரம்பப் பிரிவு: 1. ப. பாஸ்கரன் பளை றோ. க. த. க. பா, 2. கே. சங்கீதா சோரன்பற்று சி. சி. த. க. பா, 3. ச. றேய்சன் முகமாலை றோ. க. த. க. பா, கீழ்ப்பிரிவில்: 1. க. றஜிதா மாகார் அ. த. க. பா, 2. கா. செல்வஜோதி இயக்கச்சி அ. த. க. பா, 3. த. சித்திராமாசார் அ. த. க. பா, மத்திய பிரிவு: 1. கு. குணதர்சனு பளை ம. வி, 2. க. வசந்தராசா இயக்கச்சி அ. த. க. பா, 3. சி. வீனஸ் அருட்செல்வி பளை ம. வி, மேற்பிரிவு: முதல் மூன்று இடங்களையும் பளை. ம. வி. யைச் சேர்ந்த க. குணசேகரன், கா. பிறேமறெஜி, த. ரேவதி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

கவிதைப்போட்டிகள்: முதல் மூன்று இடங்களையும் பளை ம. வி. யைச் சேர்ந்த மேரி லிற்வீனு, ஜே. றிஜினோல்ட், த. கௌரிமலர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## வரணி கொத்தணி

வரணிக் கொத்தணியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு;

கட்டுரைப்போட்டி: ஆரம்ப பிரிவு 1. இ. சுரேஷ்குமார் வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை, 2. க. எழில் முதல்வன் வரணி ம, வி, 3. சி. தயாளினி குடமியன் அ. த. க. பா. கீழ்ப்பிரிவு: 1. க. நிகரில்காந் வரணி ம. வி. 2. த. ஜெயவதனி வரணி சைவப் பிரகாச வித்தியாசாலை 3. அ. திருசாந்தி குடமியன் அ. த. க. பா. மத்திய பிரிவில் து. இளங்குமரன் வரணி ம. வி. 2. இ. இந்திராதேவி வரணி ம. வி. 3. இ. ஜனார்த்தனி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மேற்பிரிவு: முதல் மூன்று இடங்களையும் வரணி ம. வியைச் சேர்ந்த க. மீரா, சி. சரோஜினிதேவி, ச. சாந்தகலா ஆகிபோர் பெற்றுக்கொண்டனர்.

கவிதைப்போட்டி: ஆரம்ப பிரிவு: 1. சி. தயாலினி குடமியன் அ. த. க. பா. 2. சி. கிருட்ாகரன் குடமியன் அ. த. க. பா. 3. இயற்றூலை அ. த. க. பா. கீழ்ப்பிரிவு: 1. ந. மதிவதனி குடமியன் அ. த. க. பா. 2. சு. யசோதன் குடமியன் அ. த. க. பா. 3. வா. அகல்யா இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை. மத்திய பிரிவிரிவு; முதலாம் இரண்டாம் இடங்களை வரணி ம. வியைச் சேர்ந்த க. புகழினி, க. இளங்குமரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். மேற்பிரிவில் வரணி ம. வியைச் சேர்ந்த க. சிவனேசன் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

## உசன் கொத்தணி

உசன் கொத்தணியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

கட்டுரைப்போட்டி: ஆரம்ப பிரிவு: பொ. முருகதாஸ் எழுதுமட்டுவாள் அ. த. க. பா. 2. த. கீதாலட்சுமிஎழுதுமட்டுவாள் அ. த. க. பா, 3. சி. பா. யூட் கெமில்டன் மிருசுவில் றோ. க. த. பா. கீழ்ப் பிரிவு: 1. கி. விஜயலதா மிருசுவில் அ. த. க, பா. 3. செரின் ஸ்காலெட் விடத்தல்பளை கமலாசினி வித்தியாசாலை. மத்திய பிரிவு; 1. க. தாரிணி உசன் இராமநாதன் ம. வி 2. அ. அமனிற்று ஜெயந்தினி மிருசுவில் றோ. க. த. க. பா. 3. பொ. செல்வராணி மிருசுவில் அ. த: க. பா. (107)

# ஊர்திபவனியில் பரிசு பெற்றவர்கள்

(நாவற்குழி)

தமிழீழவிடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பிரதேச மாணவர்அமைப்புக்குழு நடத்திய எழுச்சி விழாவின் ஊர்திப் பவனியில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்ற பாடசாலைகளினதும் தனியாரினதும் விபரம் வருமாறு: விநோத உடைப்போட்டியில் பாடசாலை மட்டத்தில் பங்குகொண்டு முதலாம் இடம் பெற்றது சாவகச்சேரி மகளிர் கல்லூரி. இரண்டாம் இடம் மந்துவில் ஸ்ரீ பார்வதி வித்தியாலயம். தனியார் சார்பில் பங்குகொண்டு முதலிடம் பெற்றது. ஈ. பி. ஆர். எல். எப். கொடுமையைச் சித்தரிக்கும் வரணி மக்கள். இரண்டாம் இடம்பெற்றது புலிவேடம் தரித்திருந்த கல்வயல் கண்ணன், ஊர்திகளுக்கான போட்டியில் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடம் மந்துவில் ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், இரண்டாம் இடம் டிறிபேக் கல்லூரி, மூன்றும் இடம் வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை, தனியார் சார்பில் கலந்துகொண்ட ஊர்திகளில் முதலாம் இடம் வரணி மதிஒளி விளையாட்டுக் கழகம். இரண்டாம் இடம் கொடிகாமம் கலை கலாச்சாரப் பிரிவு, மூன்றும் இடம் றியோ ஐஸ்கிறீம், விவசாய ஊர்தியாக பங்குகொண்டு முதலாம் இடம் செல்வி சி. ஐயாத்துரை கிராமசேவையாளர் மீசாலை, இரண்டாம் இடம் எஸ். குணபாலசிங்கம் கிராம சேவையாளர் உசன், மூன்றும் இடம் ஸ்ரீவிக்கினேஸ்வரராஜா கிராமசேவையாளர் தனங்களப்பு. (107)

# வெளிவாரி போட்டி முடிவுகள்

[நாவற்குழி]

தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சிப் பிரதேச மாணவர் அமைப்புக்குழு வெளிவாரியாக நடத்திய போட்டிகளின் முடிவுகள்.

ஆண்களுக்கான 60 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாம் இடம் ஐ. விஞயகமூர்த்தி. இரண்டாமிடம் ஐ. சோமசுந்தரம், மூன்றும் இடம் கே. சந்திரசேகரம்.

பெண்களுக்கான 20 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் 1. சு. ஞானகௌரி, 2. ப. இராசமலர், 3. ப. தேவவதனு ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப்போட்டியில்; 1. அ. தேவேந்திரன், 2. வே. சிவநேசன் 3. ச. சத்தியமூர்த்தி. பெண்களுக்கான 5 மைல் மரதன்ஓட்டப் போட்டியில் 1. கு. சுமதி, 2. சி. மஞ்சுளா, 3. கு. வசந்தா. கரபந்தாட்டம் (செற்றப்) போட்டியில் 1. மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம், 2. பளை விளையாட்டுக்கழகம், கரபந்தாட்டம் [ஓவர்] போட்டியில் 1. இளைஞர் விளையாட்டுக் கழகம், 2. சென்லி கோரியர் விளையாட்டுக்கழகம். உதைபந்தாட்டப்போட்டியில்: 1. பளை விளையாட்டுக் கழகம்,2. மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம், 3. சென்லி கோரியர் விளையாட்டுக் கழகம் தாச்சிப்போட்டியில்: 1. சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம், 2, கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகம், 3. வரணி, மதி ஒளி விளையாட்டுக் கழகம். தேங்காய் உடைத்தல் 1. மோகனதாஸ் விளையாட்டுக்கழகம்,2, வரணி மதிஒளி விளையாட்டுக்கழகம், வண்டில் சவாரி (ஏ பிரிவு) போட்டியில் 1. சி. தர்மராசா 2. ம. இளங்கிரன், 3. செ. சுப்பிரமணியம் வண்டில் சவாரி (பி பிரிவில்) 1. த. கனகரத்தினம், 2. செ. இராசன், 3. ப. சண்முகம். முட்டியுடைத்தல் போட்டியில் 1. பொ. சுகிர்தன், 2. பொ. இராஜன், 3. பா. மகேஸ்வரன். தலையணைச் சண்டையில் 1. த. சுபாஸ்கரன், 2. க, விக்கினேஸ்வரன், 3. சு. தவரத்தினசிங்கம். கிறீஸ்கம் ஏறும் போட்டியில் 1. திருவள்ளுவர் விளையாட்டுக்கழகம், 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான வேகநடைப் போட்டியில் 1. ஐ. செல்வராசா. 2. கே. இராமநாதன், 3. அ. சத்தியசீலன். கட்டுரைப்போட்டியில் 1. கு. தேவரஞ்சன், 2. பொ. இராசையா 3. செல்வி கு. கலைச்செல்வி

கவிதைப்போட்டியில் 1. பொ. இராசையா, 2. திருமதி சு. விமலாதேவி. சித்திரப் போட்டியில் 1. சி. கணேஸ்வரன், 2. ப. தவனேசன், 3. ப. ரவீந்திரன். கேலிச்சித்திரம் (காட்டூன்) போட்டியில் 1. ப. இரவீந்திரன், 2. ப. தவனேசன். (107)

# நீரில் மூழ்கி மரணம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பனிப்புலத்தைச் சேர்ந்தவரும், கொழும்பில் சுங்கத்திணைக்களத்தில் சிரேஷ்ட உதவி சுங்க ஆணையாளராகக் கடமையாற்றுப வருமான திரு. எஸ். சிவநேசன் வெள்ளவத்தைக் கடலில் குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி மரணமானர்.

வெள்ளவத்தையிலுள்ள தமது வீட்டுக்கு சமீபமாகவுள்ள கடலில் கடந்த சனிக்கிழமையன்று இவர் நீராடச் சென்றதாகவும், அப்போது சுழியில் அகப்பட்டுப் பலியானர் என்றும் இதுபற்றித் தெரிவிக்கப்படுகின்றது.

(72)

# புதிய நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. யின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் தலைவர் திரு. ரி சத்தியானந்தன் தலைமையில் நடைபெற்றபோது புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: ரி. சத்தியானந்தன், உபதலைவர்: எஸ். இரத்தினவேல், செயலாளர்: கே. எஸ். சின்னத்தம்பி, பொருளாளர்: ஏ. என். எல். பிராஸ்பிள்ளை, செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவு செய்யப் பட்டனர். (72)

# யாழ்ப்பாண சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மத்தொணி சன சமூக நிலையத்தைச் சேர்ந்த 75 பேர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் சுற்றுலாவொன்றை மேற்கொண்டனர்.

இக்குழுவில் நிலைய உறுப்பினர், பெற்றோர், இளைஞர், யுவதிகள், சிறுர்கள் அடங்கியிருந்தனர்.

இக்குழுவினர் நேற்றுமுன்தினம் ஈழநாடு அலுவலகத்திற்கு விஜயம்செய்தனர். காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலை, கோண்டாவில் ஆணித் தொழிற்சாலை, கொக்குவில் டயர் தொழிற்சாலை, யாழ். கோட்டை, மில்க்வைற் சோப் தொழிற்சாலை, காரைநகர் கசூரினு பீச் ஆகிய இடங்களுக்கும் சென்றிருந்தனர்.

# பொதுமக்கள் பார்வையில் நிவாரண விபரப் பட்டியல்

(காங்கேசன்துறை)

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்ட நிவாரணங்கள் குறித்த விபரப்பட்டியல்களை பொதுமக்கள் பார்வைக்காக கிராமசேவையாளர் அலுவலகங்கள்தோறும் தொங்கவிட உடனடியாக ஆவன செய்யுமாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவமகாராஜா யாழ் அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் இதுவரை மீளக்குடியமர்த்தல் நிவாரணம், தொழில்களை மீள அமைப்பதற்கான கொடுப்பனவு ஆகியன வழங்கப்பட்டுள்ளன. சில பகுதிகளில் தற்போதும் இந்நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனுல் இந்த இரு கொடுப்பனவுகள் குறித்தும் பொதுமக்கள் மத்தியில் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. பல பகுதிகளிலும் தில்லுமுல்லுகள், ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளதாக பொதுமக்கள்புகார் கூறுகின்றனர்.

இவ்வாருன பல முறைப்பாடுகள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவமகாராஜாவுக்கு பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து யாழ். அரசாங்க அதிபருக்கு அவர் அவசரக்கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி இரு கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள், இதுவரைகொடுப்பனவுகளைப் பெற்றவர்கள் பற்றிய விபரப் பட்டியல்களை ஒவ்வொரு கிராமசேவையாளர் அலுவலகங்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக தொங்க விட உடனடியாக ஆவன செய்யுமாறு இக்கடிதத்தில் கோரியுள்ளார். — (86)

## நிதி ஒதுக்கீடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி டிறிபேக்கொத்தணி கல்லூரிக்கு விஞ்ஞான ஆய்வுகூடத்துடன் தொடர்பாக மேல்மாடி அமைக்க எட்டேகால் லட்சம் ரூபாவும் சுற்றுமதிலுக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதென கல்லூரி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் தெரிவித்தார் (81)

# நன்னீர் பொதுக் கிணறு அமைக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

மீசாலை வடக்கைச் சேர்ந்த கொயிலாமனையிலுள்ள நாவலர் சனசமூக நிலையத்தில் நன்னீர்ப் பொதுக்கிணறு ஒன்று அத்தியாவசியம் அமைக்க வேண்டுமென அப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்கள் தங்கள் கோரிக்கையில் தெரிவித்திருப்பதாவது: ''இந்நிலையம் பல வருடங்களாக இயங்கிவருகிறது. இதைச்சுற்றி அநேக குடும்பங்கள் வாழ்கின்றன. பிரதானமான வீதியொன்று மந்துவிலிலிருந்து ஆரம்பித்து கொடிகாமம் சந்தைக்குச்செல்கின்றது. தினமும் சனநடமாட்டமுள்ள இடம். இவ்வழிச் செல்வோரும் சுற்றியுள்ள குடிகளும் நன்னீரின்றி கஷ்டப்படுகின்றனர். இது மட்டுமன்றி இக்கிணற்றின் சுற்றுப்பிரகாரத்தில் சுமார் ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமான தோட்டங்களுமுண்டு. அங்குள்ள விவசாயிகளும் குடிநீர் பெறும் கஷ்டம் ஏற்பட்டுவருகின்றது. ஆதலால் பொது நன்னீர்க் கிணறு ஒன்று அவசியமாக அமைக்கப்படல் வேண்டும்.''

# அம்பாள் ஆலயத்தை உடைத்து பெறுமதியான பொருட்கள் கொள்ளை

## ப. நோ. கூ. சங்கத்திலும் திருட்டு

(பருத்தித்துறை)

புலோலி மந்திகை அம்பாள் ஆலயக் கதவை இரவு நேரத்தில் உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் அம்பாளின் வெள்ளி அங்கி, கால் சிலம்பு, உண்டியல் பணம் உட்பட பல்லாயிரக்கணக்கான ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவதினம் இரவு ஆலயப் பக்கக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற கொள்ளையர்கள் மூலஸ்தானத்திலுள்ள அம்மன் விக்கிரகத்தையும் புரட்டி வைத்துள்ளனர். ஆலயத்தினுள்ளிருந்த உண்டியல் பெட்டியையும் உடைத்து அதனுள் இருந்த பணத்தையும் சுருட்டிக் கொண்டனர்.

மறுநாட்காலை இக்கொள்ளை பற்றித் தெரிந்து ஆலயத்திற்குச் சென்ற பக்தர்கள் ஆலய வீதியில் அம்பாளின் கண்மலர், நாணயங்கள் என்பன இருந்ததைக்கண்டு மீட்டுள்ளனர். சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரும் இவ் ஆலய கூரை ஓட்டைப் பிரித்துக் கொண்டு இறங்கிய கொள்ளையர்கள் உண்டியலை உடைத்து பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

சில வாரங்களுக்கு முன்னர் மந்திகையிலுள்ள புலோலி ப. நோ. கூ. சங்க மக்கள் கடையும் இரவு வேளையில் உடைக்கப்பட்டு சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பாவனைப் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. புலோலிப் பகுதியில் அதிகரித்துவரும் இத்திருட்டுச் சம்பவங்களால் இப்பகுதி மக்கள் பலத்த அச்சமும் கவலையும் அடைந்துள்ளனர், (52)

# இப்படியும் நடக்கிறது

கவிஞர் பா. சத்தியசீலனைத் தெரியாதவர்கள் நம் மத்தியில் இருக்கமுடியாது.

அவர் வெறும் இலக்கியவாதி மட்டுமல்ல; குழந்தைகளின் இதயங்களைப் பலகோணப் படைப்புகள் மூலம் 'கொள்ளையடிக்கும்' தனித்தன்மை பெற்ற பெரிய கவி உள்ளம் கொண்டவர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கவிஞர் சத்திய சீலனின் 'அருளப்பர் அம்மானை' நூல்வெளியீட்டு விழா அல்லைப் பிட்டியில் சிறப்பாக நடந்தது.

முதல் பிரதி, இரண்டாம் பிரதி, மூன்றும் பிரதி குறிப்பிட்டவர்கள் வாங்கிக் கொண்டதும் விழாவுக்கு வந்திருந்த பிரமுகர் ஒருவரும் ஒரு 'என்வலப்'பை கையளித்து 'அம்மானை' நூலொன்றைப்பெற்றுக்கொண்டார்.

''அட்சரலட்சம் பெறும்'' என்பது சற்று மிகையானது தான்; ஆனால் இந்த 'அம்மானை'யில் வரும் ஒவ்வொரு அட்சரமும் ஆயிரம் பெறும் என்று நிச்சயமாக நம்புறேன். இதனால் ''முப்புறமும் கத்துகடல் முத்தமிடும் என்னூரரை...'' என்று தொடங்கும் முதலாவது வெண்பாவில்வரும் 'மு' என்ற அட்சரத்துக்காக(எழுத்துக்காக) இந்த ஆயிரம் ரூபாவை அன்பளிக்கிறேன். ஏற்றிடுக'' என்ற வாசகங்களுடன், அம்மானை வெளியீட்டு விழாவில் ஆசிரியர் சோமசுந்தரேசன் எனும் பிரமுகர் 1000 ரூபாவை என்வலப்பில் வைத்து உதவியிருந்தார்!

நல்ல கவியை நயக்கத் தெரிந்தவர்கள் அல்லைப்பிட்டியூரில் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பது ஒருபுறமிருக்க; கவிஞரின் கவிக்கு – ஒரு எழுத்துக்கு ஆயிரம் ரூபா என்றால்...!

ஒரு சின்னக் குறிப்பு: ஆசிரியர் சோமசுந்தரேசன் தான், அல்லைப்பிட்டியில் 15 ஆண்டுக்கு முன்னர் நீச்சல் தடாகமொன்றை நிறுவியவர்.

'ஊடுருவ'

# சட்டவிரோத மின் பாவனை: யாழ். மாநகரசபை 'உஷார்' நடவடிக்கை!

## விசேட குழு கண்காணிக்கிறது

(யாழ்ப்பாணம்)

''யாழ் மாநகரசபைப்பகுதியில் சட்டவிரோதமின்பாவனையிலும், மின்மோசடி நடவடிக்கைகளிலும் ஈடுபடுபவர்களை 'விசேடகுழு' ஒன்று கண்டு பிடித்து தண்டப்பணம் அறவிட்டு வருகிறது.''

இவ்வாறு மாநகரஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் நேற்று 'ஈழநாடு'க்கு தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் தகவல் தருகையில்:

''மின் பொறியியலாளர் ஒருவர் தலைமையிலான இக்குழு கடந்த சில தினங்களில் இவ்வாறான பல சட்டவிரோத பாவனையாளர்களையும், மின்மானியில் மோசடி செய்தவர்களையும் கண்டுபிடித்து 2000 ரூபா வரையில் தண்டப் பணம் அறவிட்டுள்ளது.

''மாநகரசபைப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் இவ்வாறான சட்டவிரோத மின் பாவனையால் சுமார் 5 லட்சம் ரூபா வரை சபைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. மேற்படி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் குழுவினருக்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். (சி)

# கிளிநொச்சியில் தினம் தினம் அதிகரிக்கும் தற்கொலை சம்பவங்கள்

(கிளிநொச்சி)

வாழ்க்கையில் விரக்தியடைந்த பலர் கிருமிநாசினி அருந்தி கிளிநொச்சிப் பகுதியில் மரணத்தை தழுவிக்கொண்டுள்ளனர்.

கோணாவில் காந்தி கிராமத்தில் இராயசாமி பரமநாதன் (வயது 28) தம்பிராசா பிரியாணி (வயது 17) ஆகிய இருவரும் கிருமிநாசினியிடம் தஞ்சமடைந்து ஒன்றாக மரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

பாரதிபுரத்தில் சுப்பையா மோகன் (வயது 28) என்பவரும் வெளிக்கண்டல் கண்டாவளையில் வல்லிபுரம் ரவீந்திரன் (வயது 22) என்பவரும், பாரதிபுரம் வாசியாகிய வேலு காளிமுத்து (வயது 23) என்பவரும் தற்கொலை செய்துள்ளனர்.

உருத்திரபுரத்தில் இராமநாதி மார்க்கண்டு (வயது 72) என்னும் வயோதிபரும், கோரக்கன் கட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம். இலட்சுமி (வயது23), அம்பாள் குளம் வாசியான கந்தையா நாகலிங்கம் (வயது 22) என்பவரும் மூன்றும் வாய்க்காலில் புங்குடுதீவைச்சேர்ந்த கணேசு சத்தியமூர்த்தியும் [வயது 21) கிருமிநாசினி அருந்தி மரணமானார்கள்,

கிளிநொச்சிப் பகுதியில் அற்ப காரணங்களுக்காக கிருமிநாசினி அருந்தி பலர் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்றும் சாதாரணமாக கட்டுப்பாடு இன்றி கிருமிநாசினி கிடைப்பதும் பாவனையில் உள்ளமையும் இம் மரணங்களுக்கு காரணம் எனவும் மேற்படி மரணங்கள் அனைத்தையும் விசாரணை செய்த கிளிநொச்சிப் பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி குறிப்பிட்டார். (83)

# கடமையை சேவையாக கருத வேண்டும்

(காங்கேசன்துறை)

''கிராம சேவையாளர்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து மக்களின் நன்மதிப்பைப் பெறவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் ஒழுங்காகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். கடமையை சேவையாகக் கருதி செயல்பட்டால் முறைப்பாடுகள் எழுவதற்கு இடம் இருக்காது.''

இவ்வாறு தெல்லிப்பழை சந்திக்கு அண்மையில் தந்தை செல்வாபுரம் கிராமசேவையாளர் பிரிவுக்கான அலுவலகத்தை திறந்து வைத்துப் பேசிய வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா கூறினார்.

தந்தை செல்வாபுரம் கிராம சேவையாளர் திரு. செ. றெ. ஜேசுபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வண பிதா றெபேட் அடிகளார் பிரம்மஸ்ரீ வி. நாராயண சர்மா ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்கள்.

அரச அலுவலர்கள், கிராம சேவையாளர்கள் பொதுமக்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (86)

# "போட்டிகள் மூலம் நற்பண்புகள்வளருகின்றன'

(காங்கேசன்துறை)

''சிறந்த உடல்நலமும் வீரமும் நிறைந்த சமுதாயம் உருவாக விளையாட்டுப்போட்டிகள் வழிசமைக்கின்றன. போட்டிகளில் வெற்றிபெறுவது, தோல்வியடைவது சகஜம், ஆனால் இதன் மூலம் பெறும் அனுபவங்கள் நற்பண்புகள் எமதுவாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன.''

இவ்வாறு மாவை கிளானை வளர்மதி சனசமூக நிலைய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக்கலந்து உரையாற்றிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவமகாராஜா கூறினர்,

திரு. ச. நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப்போட்டியில் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கொல்லங்கலட்டி சைவத் தமிழ்க்கலவன்பாடசாலை அதிபர் திரு. வே. தனபாலசிங்கம் கிராமசேவையாளர் திரு. கு. கனகலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவ் விளையாட்டுப்போட்டியில் விவாகம் ஆகாதவர்களும் விவாகமானவர்களும் பங்கு பற்றிய கயிறு இழுத்தல்போட்டியும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (86)

# பஸ்சேவை இல்லை

(ஆனைக்கோட்டை)

கோப்பாய் ராஜ வீதியில் உள்ளவர்கள் தமது அன்றாட போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

கடந்த ஆறுவருடகாலமாக இப்பகுதியில் போக்குவரத்திலிருந்துவந்த இ. போ. ச. பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாலேயே இந்நிலை தோன்றியுள்ளது.

இவர்கள் பிரயாணம் செய்வதற்கு சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தொலைவிலுள்ள இருபாலை சந்திக்குச் சென்று பஸ் அல்லது வானில் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

# அட்டனில் விளையாட்டுப் போட்டிகள்

(நுவரெலியா)

தமிழ் – சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு அட்டன் பொலிஸாரும் அட்டன் சமாதான கமிட்டியினரும் இணைந்து நடத்திய விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அட்டனில் சிறப்பாக நடைபெற்றன.

ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப் போட்டிகளுடன் விநோத உடைப்போட்டி' கயிறு இழுத்தல் கிறீஸ்மரம் ஏறுதல் என்பன அட்டன் டண்பார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

பல வருடங்களுக்குப் பின்னர் அட்டனில் சிறப்பாக நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிகளை பெரும் தொகையான பொது மக்கள் கண்டுகளித்தனர.

(127)

# சிற்றூரவை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ளால் தெரிவுசெய்யப்பட்டவை. 7 பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் ஒவ்வொரு சிற்றூரவையிலும் இடம்பெற்றுள்ளது. (152)

# 'கல்வி மலர்' வெளியிட ஏற்பாடு

(காங்கேசன்துறை)

மருதனுமடம் கல்விக்கோட்டப் பிரிவு குறித்து 'கல்வி மலர்' ஒன்றை வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கல்விக் கோட்டத்தில் உள்ள 105 பாடசாலைகள் பற்றிய வரலாறுகள், விபரங்கள் மற்றும் கல்வி சம்பந்தமான ஆய்வுக்கட்டுரைகள், செயல் திட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இம்மலர் அமையுமென தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டு மலர் தயாரிப்புப் பணியில் இக்குழு ஈடுபட்டுள்ளது. (86)

# சமாதான நீதவான்

(யாழ்ப்பாண)

திரு, கந்தையா தேவசிகாமணி யாழ். மாவட்ட சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கை நிர்வாகசேவையைச் சேர்ந்த இவர் வன்னிப் பிராந்தியத்தில் வவுனியா மாவட்டத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்திலும் கடமையாற்றிய இவர் 1987ம் ஆண்டில் குடாநாட்டில் ஏற்பட்ட வன்செயலால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு தஞ்சம் புகுந்த வேளையில் இவர்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்க பெருமுயற்சி எடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நிவாரணம் கிடைக்கவில்லை

(வடமராட்சி)

வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கான கஷ்ட சேவை நிவாரணம் வழங்கப்படவில்லை என வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

கடந்த வருடம் பல கஷ்டத்தின் மத்தியில் சேவையாற்றிய தமக்கு இந்நிவாரணம் கிடைக்காமை பெரும் வேதனை தருவதாக மேற்படி ஊழிகள் தெரிவித்துள்ளனர். (51)

# விளையாட்டு போட்டி

(காங்கேசன்துறை)

மருதனுமடம் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் மே மாதம் 4–ம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளன.

மருதனுமடம் கல்விக் கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியில் மேற்படி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 105 பாடசாலைகள் பங்கு பற்றுகின்றன.

(86)

### யாழ். பிரதம தபாலகத்தில்

# உரிமைகோரப்படாத நிலையில் டிராப்டுகள், காசோலைகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால அசம்பாவிதங்களின்போது யாழ். பிரதம தபாற் கந்தோரில் உடைக்கப்பட்டிருந்த வெளிநாட்டுக்கடிதங்களிலிருந்த காசோலைகள் டிராப்டுக்களில் பெரும்பாலானவை அதற்குரிய பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

பின்வரும் காசோலைகள் டிராப்ருக்கள் யாழ். பிரதம தபாற் கந்தோரில் உரிமை கோரப்படாமல் கிடக்கின்றன.

இன்றிலிருந்து ஒரு மாதத்திற்குள் மேற்படி காசோலைகள் டிராப்டுக்களுக்கு உரியவர்கள் தமது அடையாளத்தினை உறுதி செய்து யாழ். பிரதம தபாற் கந்தோரில் அந்தக் காசோலைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிக்கப்பட்ட காலத்திற்குள் உரிமைகோரப்படாத காசோலைகள் கொழும்பு தலைமைத் தபாற் கந்தோருக்கு அனுப்பப் பட்டுவிடுமெனத் தெரியவருகிறது.

குறிக்கப்பட்ட டிராப்டுகள் காசோலைக்குரியவர்களின் பெயர் விபரம்:

கே. சந்திரசேகரமுதலி–அமெரிக்கன் டொலர் 64,26, மேரி தெரேசா இரத்தினசிங்கம்–அமெரிக்கன் டொலர் 100, எஸ். சிவலிங்கம்– அமெரிக்கன் டொலர் 500, சி. சிறிகாந்தன் – அமெரிக்கன் டொலர் 100, எஸ். ஏ. நவரெட்ணம்– அமெரிக்கன் டொலர் 5000, எஸ். நித்தியானந்ததேவி–அமெரிக்கன் டொலர் 200. எஸ். கே. விமலாதேவி ஜேர்மன் மார்க் 100, எஸ். சாந்தி ஜேர்மன் மார்க் 200, திருமதி மேரி தெரேசா நவரத்தினம் மார்க் 160, திருமதி எஸ். சேஞதிராஜா மார்க் 200, ஆர். எவ்லின் ரதனி ஜேர்மன் மார்க் 220, ஈ. எஸ். இராசையா ஜேர்மன் மார்க் 250, சுந்தரம் சண்முகலிங்கம் ஜேர்மன் மார்க் 400, ஏ. பஞ்சலிங்கம் ஜேர்மன் மார்க் 1500, செல்வி எஸ். சீனிவாசகம் இலங்கை ரூபா 250. எஸ். சிவநேசன் இலங்கை ரூபா 2500, திருமதி பிலோமிஞ பிரான்சிஸ் இலங்கை ரூபா 10493, ஜே. அன்ரன் பாலராஜா இலங். ரூபா 17255, கந்தையா பாலசுப்பிரமணியம் ரூபா 350, சின்னத்தம்பி சிவசம்பு அமெ. டொலர் 215, சின்னத்தம்பி சின்னம்மா அமெரிக்கன் டொலர் 213, திருமதி சரஸ்வதி சிவராசா டொலர் 80, திருமதி கே. நாகராசா நோர்வே குரோஸ் 525, திருமதி கே. நாகராசா நோர்வே குரோஸ் 522, 522, திருமதி கே. கமலாதேவ நோர்வே குரோஸ் 250, செல்வி என். ஜெயதீஸ்வரி அமெ. டொலர் 30, என். கைலாசபதி அமெ. டொலர் 100, செல்வி கே. கிருபாதேவி பவுண்ஸ் 200, ரி. செல்வரட்ணம் பவுண்ஸ் 1000, செல்வி வத்சலா சிவப்பிரகாசம் பவுண்ஸ் 1000, ரி. செல்வரட்ணம் பவுண்ஸ் 1000, ஏ. பரமலிங்கம் பவுண்ஸ் 200, திருமதி என். செல்லையா கனடா டொலர் 100, கே. சுந்தரலிங்கம் கனடா டொலர் 1000, ரி. கதிரவேலு கனடா டொலர் 100 எஸ். என். இரத்தினசிங்கம் கனடா டொலர் 350, பி, சிங்கராஜா கனடா டொலர் 50, திருமதி ஏ. மனுவற்பிள்ளை கனடா டொலர் 75, எஸ். அரியராஜா கனடா டொலர் 200, வி. ரகுநாதன் க. டொலர் 200, செல்வி ரஞ்சிதமர் சின்னத்துரை கனடா டொலர் 1000, திருமதி சி. உதயசுந்தரம் க. டொலர் 200, ஆர். வள்ளி நாயகி கனடா. டொலர் 200, திருமதி கே. சீவரட்ணம் க. டொலர் 25. ஆர். சுரேஷ் குமார் க டொலர் 50, எஸ். இராசதுரை க. டொலர் 100, வி. கே. சின்னத்துரை க. டொலர் 25, திருமதி பி. இராமச்சந்திரன் க. டொலர் 250, கே. இரத்தினசிங்கம் க. டொலர் 300; ஜிரேவங்கி பவுண்ஸ் 100. (153)

---

## நிலத்துக்கடியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்தனர்.

ஜே. வி. பி. இயக்கத் தலைவர் இந்த அச்சகத்தைப் பயன்படுத்திவந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அச்சகத்தில் மிக நவீன அச்சியந்திரங்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

---

## நியாயமான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசா உணர்ந்து கொண்டிருக்கிறுர். இராணுவத்தை வைத்துக் காரியம் சாதிப்பது நடவாதென்பது அவருக்குத் தெரியும்''.

''தமிழீழக் கோரிக்கையை நாங்கள் கைவிடவில்லை. தமிழ் மக்கள் ஒரு தேசமாக, சுயநிர்ணயம் பெறப் போராடுவது, எமது தாயகத்தின் நிலப்பரப்பைக் கட்டிக்காப்பது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் குறிக்கோளாகும்''.

தேர்தலுக்குப் பிறகு ஆயுதங்களைக் கைவிட்டுவிடுவீர்களா என்று கேட்கப்பட்டபோது— ''ஆயுதங்கள் எமது மக்களின் பாதுகாப்பிற்காக'' என்றும், ''எதிர்காலத்தில் இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றுப் பயமில்லாமல் வாழ்வார்கள்'' என்றும் திரு. மாத்தயா தெரிவித்தார். (து)

---

## சார்க்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேனநாயக்கா பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறுர்.

மாலைதீவின் 25-வது சுதந்திர தினம் எதிர்வரும் நவம்பர் மாதம் கொண்டாடப்படவிருக்கிறது. அப்போது 'சார்க்' மாநாடு மாலைதீவில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானல் மாலைதீவில் நடைபெறும் மாநாட்டை இலங்கை பகிஷ்கரிக்குமா என திரு. தர்மசிறி சேனநாயக்கா மற்றுமொரு கேள்வியை எழுப்பினர்.

அதற்கு அமைச்சர் ஹேரத் ரத்ஞ கூறியதாவது:-

''இதில் எந்தவித பிரச்சனையும் இல்லை. மாலைதீவில் மாநாடு நடைபெறுமுன் இலங்கையில் அந்த மாநாடு நடைபெறும்'' என்ருர்.

''அப்படியாயின் 'சார்க்' அமைப்பு நாடுகளின் சாசனத்தின்படி ஒரே வருடத்தில் இரண்டு மாநாடுகள் நடத்துவதுபற்றி முரண்பாடுகள் ஏற்படாதா?'' என திரு. சேனநாயகா வினவியபோது—

''ஒரு வருடத்தில் ஒரு மாநாட்டைத்தான் நடத்த வேண்டுமென்ற கட்டுப்பாடு சாசனத்தில் குறிப்பிடப்படவில்லை'' என அமைச்சர்ஹேரத் பதிலளித்தார்.

---

## 6-வது நாளாக நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 'றிசேர்வ்' பொலிஸ்ுக்கு ஆள்திரட்டல் நேற்று ஆருவது நாளாகவும் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற 'றிசேர்வ்' பொலிஸ் நேர்முகப் பரீட்சைக்குச் சுமார் 200 பேர் தோற்றியிருந்தனர்எனத் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க நேர்முகப் பரீட்சை நாளை 27-ம் திகதியும், நாளை மறுதினமும் நடைபெறமாட்டாது என்றும் மீண்டும் 29-ம் திகதி முதல் வழக்கம்போல் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்றும் யாழ். பொலிஸ் பகுதியினர் நேற்றுத் தெரிவித்தனர். (153)

---

## 'ரைம்ஸ்' சஞ்சிகைக்கு தடை

(கொழும்பு)

இம்மாதம் 23ம் திகதியிடப்பட்ட அமெரிக்கச் சஞ்சிகையான 'ரைம்ஸ்' (TIMES) சஞ்சிகைக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

சம்பந்தப்பட்ட சஞ்சிகையில் அரசுக்கு விரோதமான கட்டுரைகளும், பத்திரிகையாளர் ரிச்சர்ட் டீ சொய்ஸாவின் கொலை பற்றிய விபரங்களும் இடம் பெற்றிருப்பதாக அறிய வந்துள்ளது.

---

# யாழ்.நகரில் எரிபொருள் விநியோக விபரம்

[யாழ்ப்பாணம்]

தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் நடமாடும் யாழ். நகரில் உள்ள எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் போதியளவு எரிபொருள் இல்லாததே தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

9500 லீற்றர் பெற்ரோல் கொள்ளக்கூடிய 3 பாரிய கொள்கலன்கள் இருந்தபோதும், ஒரு கொள்கலன் கொள்ளக்கூடிய அளவு பெற்ரோல் மட்டுமே ஒவ்வொரு முறையும் ரயில் வகன்களில் கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ரயில் வகனிலும் 9500 லீற்றர் பெற்ரோல் வருவதாகவும், சாவகச்சேரி, தெல்லிப்பழை போன்ற இடங்களில் ஒவ்வொரு வகன் பெற்ரோல் வழங்கப்படுவதாகவும், ஆனல் அப்பகுதிக்கு அவை தேவைக்கு அதிகமென்றும் கூறப்படுகிறது.

இதனல் யாழ். நகர்ப் பகுதியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரிலுள்ள ஒவ்வொரு எரிபொருள் நிலையத்திற்கும் 5500 லீற்றர் பெற்ரோல் வழங்கப்படுவதாகவும், ஆனல் தினமும் 1500 லீற்றர் மட்டுமே விநியோகிக்க வேண்டுமென எரிபொருள் கூட்டுத்தாபனம் பணித்துள்ளதாகவும் எரிபொருள் நிலைய உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் செய்வதாலேயே நகரில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பசவுர்கள் வன்செயலால் சேதமடைந்திருப்பதாகவும், சாரதிகள் இல்லையென்றும் எரிபொருள் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தள.

இதேசமயம், எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் பவுசரில் எரிபொருள் கொண்டு வருவதைப் பொறுப்பேற்று நடத்த முன்வருகிறுர்களில்லை என்றும் கூறப்படுகிறது.

கட்டுப்பாட்டு விலையில் விற்கும்போது ஒரு லீற்றர் பெற்ரோலுக்கு 13 சதம் மட்டுமே லாபமாகக் கிடைப்பதாகவும், இது ஊழியர் சம்பளத்திற்கும் மின்சாரம் மற்றும் செலவுக்கும் போதியதாக இல்லையென்றும், இதனை ஒரு சேவையாகவே செய்துவருவதாகவும் எரிபொருள் நிலைய உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

---

# மேதினக் கூட்டம் ஓர் அணியின்கீழ் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் -டொமினிக்

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணத்தில் இம்முறை மேதினக் கூட்டம் ஒரு அணியின்கீழ் யாழ். முற்றவெளி மைதானத்தில் மேமுதலாம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறும். இதற்கு விடுதலைப் புலிகள் முன்னணி வகிப்பார்கள்'' என்று பத்திரிகையாளர் மகாநாட்டில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது; ''இதற்குச் சகல தொழிற் சங்கங்களும், பொது ஸ்தாபனங்களும் முன்வந்து ஒத்துழைப்பை நல்க வேண்டும். அத்தோடு இந்த மேதினக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பல முக்கியஸ்தர்களும் பேசவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

''மேதினத்தன்று விசேட நிகழ்ச்சியாக ஓவியக் கண்காட்சி யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இதில் இடம்பெறும் ஓவியங்கள் சமகால நிகழ்வுகளையும், எழுச்சிகளையும், தொழிலாளர் பற்றியும் பிரதிபலிக்கத்தக்கதாக அமைந்திருக்கும்.

''மேதினத்தன்று நான்கு எழுச்சிப் பேரணிகளும், ஊர்திகளும் நெல்லியடி, தெல்லிப்பழை, வேலணை, கைதடி போன்ற இடங்களிலிருந்து ஆரம்பித்து ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தைவந்தடைய ஏற்பாடாகியுள்ளது. இந்த ஊர்திகளும் எழுச்சி, சமகால நிகழ்வுகளைச் சித்தரிப்பவையாகஇருக்கும்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி பானுவும் இதில் உரையாற்றுவார்.

இம்மேதின விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைத்துத் தொழிற் சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள், தொழிலாளர்களுக்கும் விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர். (152)

---

## அமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சன்ட் பெரேரா உட்படப் பலர் இவ்வாரத்தில் வருவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

---

## இந்தியப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டபோது அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இந்திய இராணுவ தளபதி லெப் ஜெனரல் கல்கட்டிடம் தாம் முறைப்பாடு செய்ததாகவும் அதற்கு அவர் கைதானவர்கள் பற்றிய பெயர் விபரங்களைத் தம்மிடம் தரும்படியும் கேட்டுக்கொண்டதாகவும் அதனைத் தொடர்ந்து தாம். ஐம்பத்தியேழு பேரின் பெயர்ப் பட்டியலை உத்தியோகபூர்வமாகக் கையளித்ததாகவும் அதற்கு அவர்கள் இலங்கையைவிட்டு வெளியேறும்வரை எவ்வித பதிலும் தராமல் வெளியேறியதாகவும் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்டுக்காணமல்போன அப்பாவி மக்கள் விடயத்தினைத் தாம் ஸ்ரீலங்கா அரசிடம் சமர்ப்பித்து அவர்களின் நிலைபற்றி அறிவதில் ஆர்வம் காட்டிவருவதாகவும்,

இது விடயத்தில் ஸ்ரீ லங்கா அரசு எமக்கு நல்லதொரு பதிலைத் தந்துதவும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் பிரசைகள் குழு தெரிவித்தது. (51)

---

## வர்த்தகர்களுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இதுவரை வர்த்தக சங்கத்தில் சேராதிருக்கும் வர்த்தகர்களை வர்த்தக சங்கத்தில் சேருமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பிரிவு யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு. டொமினிக் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பலஸ்தாபனங்கள் வர்த்தக சங்கத்தில் சேராது இருக்கின்றுர்கள் என்றும் வர்த்தகர்கள் ஒரே அமைப்பின் கீழ் இருந்தால் அவர்களுக்கு நேரும் இடர்களை ஒரு அமைப்பு மூலம் முன்வைத்து நீதியைக் கோர சுலபமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

## இலங்கை வெற்றி

ஷார்ஜாவில் ஒஸ்ரலேஷியா கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி இந்தியாவை வென்றுள்ளது.

---

## இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை நிதிக்காக நாளை வெள்ளிக்கிழமை மாலை சுண்டுக்குளி பரியோவான் கல்லூரி மண்டபத்தில் ''சித்திரையில் ஒரு மாலை'' என்னும் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

---

## உடைக்கப்பட்ட நிலையில் ஆதிமூலச் சிலை!

(யாழ்ப்பாணம்)

சுன்ஞகம் மயிலணி கந்தசாமி கோவில் ஆதிமூலச்சிலை உடைக்கப்பட்ட நிலையில் நேற்றுச்காலைகாணப்பட்டது.

நேற்று முன்தினம் வழமையான மாலை 5 மணி பூசை நடைபெற்றபின் இச்சம்பவம் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

வசந்த மண்டபகதவு இரும்பு கதவு யாவும் உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

நேற்றுக்காலை பெருந்திரளான மக்கள் கோவிலுக்குச் சென்று பார்வையிட்டனர் இதன்பின்னர் இச்சம்பவம் தொடர்பாக சுன்ஞகம் விடுதலைப்புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.